# விடுதலைப்புலிகள்

குரல்: 61 | புரட்டாதி - 1995 | அன்பளிப்பு: ரூபா 5/=


## உள்ளே


★ வட புலப் போர் அரங்கின் கள நிலை

★ மணக் கொடைத் தடைச் சட்டம்

★ மேற்குலகின் கருத்து மாற்றம்

★ பணக்கொடை தேசத்தைக் காக்கும்

★ கடலெங்கும் விரிகிறது களம்

★ இலட்சிய ஆசைகள்


# தமிழர் படைபல உயர்வு - தமிழினத்திற்கு அதுதான் வாழ்வு!

சிங்கள அரசைப் பொறுத்தளவில், இப்போது, ஒரு போர்ச்சூதில் அதுஇறங்கி உள்ளது. பாரிய ஆட்தொகை - பிரமாண்டமான படைக்கல சக்தி என்ற இரண்டையுமே துருப்புச்சீட்டுகளாக வைத்து இந்தப் போர்ச்சூதை வென்றுவிட சிங்கள அரசு முயல்கின்றது. இந்தப் போர்ச்சூதில் சிங்கள அரசைத் தோற்கடிப்பதற்கு, புலிகள் இயக்கத்திற்கும் இந்த இரண்டு துருப்புச்சீட்டுக்களே தேவையாக உள்ளன.

குடாநாட்டுக்குள் நடந்தேறியுள்ள பாரியபடைக்குவிப்பால். தமது முகாங்களின் எல்லைகளை விஸ்தரிப்பதில், சில அனுகூலங்களைச் சிங்களப் படைகள் பெற்றுள்ளனதான்; ஆயினும், ஒட்டு மொத்தமான யாழ்ப்பாணப் படையெடுப்பு என்பது, சிங்களப் படைகளுக்கு சாத்தியமான ஒன்றாகஇருக்கப் போவதில்லை.

எதிரிப் படைகள் நடாத்தும் ஒவ்வொரு ஆக்கிரமிப்பு முயற்சிக்கும் தகுந்த பதிலடி கொடுப்பது என்பதில், புலிகள் இயக்கம் உறுதியாகவே உள்ளது. கடந்த ஞாயிறன்று (01.10.95) சிங்களப் படைகள் நடாத்திய 'இடிமுழக்கத் தாக்குதல்' நடவடிக்கைக்குப் பதிலடியாக, 03.10.95 அதிகாலை புலிகள் தொடுத்த தாக்குதலும் அதில் ஒரு அங்கமாகும்.

இந்தப் பெருந்தாக்குதலில் 150 போராளிகள் வீரச்சாவடைந்தனர். சமரின் இராணுவ பரிமாணத்தைப் பொறுத்தளவில், இந்த உயிரிழப்பு என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகவே உள்ளது. அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், நவக்கிரி என்று பரந்த பரப்பில் நடந்த சமர் என்பதாலும், மற்றும் புதிதாக ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி என்பதால் - அந்தப் பகுதிமீது புலிகள் எதிர்த் தாக்குதலை நடாத்துவார்கள் என்ற எதிர்பார்ப்பில் - சிங்களப் படைத்துறையின் முழுக் கவனமும் அந்த நிலப்பரப்பின் மீதே குவிக்கப்பட்டிருந்ததாலும், பொருதுகளம்கடுமையானதாக மாறி இருந்தது. சண்டைக்களம் கடுமையானதாக இருக்கும் என்பதற்காக, எதிரியின் பெரியதொரு ஆக்கிரமிப்பு முயற்சிக்குப் பதிலடி கொடுக்காமலும் இருக்கமுடியாது. ஏனெனில், அது உயிரிழப்புகள் தரும் பரிவுத் துயரை விட, வேறுபல இராணுவப் பின்னடைவுகளை தமிழினத்தின் மீது திணித்துவிடலாம். எனவே, பதில்தாக்குதலும் அதனால் எழக்கூடிய உயிரிழப்புகளும் தவிர்க்கமுடியாதவையாகின்றன.

ஆயினும், இந்தப் பதில் தாக்குதலின்மூலம், புலிகள் இயக்கம் தான் நினைத்ததைச் சாதிக்க முடியாது போய்விட்டது என்பதும் உண்மையாகும். எனினும், சிங்களப் படைத்தரப்பில் நிகழ்ந்த உயிரிழப்புக்கள் அரசால் குறைத்து வெளியிடப்பட்டுள்ளன என்ற உண்மை நிலையையும், இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

இதேவேளை, குடாநாட்டுக்குள் எதிரி வைத்திருக்கும் அசுர பலத்திலும் ஒரு 'இராட்சத பலவீனம்' இருக்கின்றது. அதாவது, குடாநாட்டுப் படைகளுக்கு இருககின்ற விநியோகவழிப் பிரச்சினைகளே அந்தப் பலவீனமாகும். ஒரு குருட்டு நம்பிக்கையுடன், தனது மூலதனம் அனைத்தையும் ஒருங்கு திரட்டி - ஒரு நிச்சயமற்ற தொழிலில் மூதலீடு செய்ய முனையும் ஒரு வர்த்தகனின் நிலையிலேயே, இன்று சந்திரிகா அரசு உள்ளது; அதிர்ஷ்டவசமாக ஒருசில இலாபங்களையும் அந்த வர்த்தகன் பெறலாம். இந்த வகையில் தனது கைகளைவிட்டுத் தூர விலகிக் கொண்டிருக்கும் வழங்கல் பாதைகளை நம்பி, பல்லாயிரம் படையினரைப் போரில் இறக்கும் ஒரு சூதாட்ட முயற்சியில் சிங்கள அரசு ஈடுபட்டுள்ளது. சிங்கள அரசு எதிர்கொண்டு நிற்கும் இந்த வழங்கல் பாதைப் பிரச்சினைக்கு, 02.10.95 அன்று திருமலைக் கடற்பரப்பில் நடந்த கடற் சண்டை, பிந்திய நல்ல உதாரணமாக இருக்கும்.

தரைச் சண்டையில் சில வெற்றிகளை அரசுப் படைகள் பெற்றாலுங்கூட, அதன் அடிப்படையான இராணுவ பலவீனத்தை நாம் சரியாகப் பயன்படுத்தவேண்டும். மூழ்கும் கப்பலின் மேற்தளத்தில் இருந்தபடி போரிடும் அந்தக் கப்பலின் மாலுமிகள் பெறும் சில வெற்றிகளைப் போலவே, குடாநாட்டில் உள்ள படையினர் பெறும் வெற்றிகளும் இருக்கின்றன.

ஆனால், தமிழினம் விரைந்து செயற்பட வேண்டும். கப்பலின் ஓட்டையை அடைத்துப் பயணத்தை தொடர, எதிரியை நாம் அனுமதிக்கக்கூடாது; அது எமக்கு ஆபத்தானது!

எனவே, எதிரியின் பலவீனத்தைப் படுதோல்வியாக அவனுக்கு மாற்றிக்கொடுக்கப் புலிகள் இயக்கத்திற்குத் தேவையானது, ஆட்பலமும் - படைக்கல சக்திப் பலமும் ஆகும்! ○

## "சமாதானத்திற்கான போர்"



- கி. ஓவியநாதன் (போராளி)


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு



www.eelamview.com

# இனப்படுகொலையை மறைக்க ஒரு ஜனநாயக மீறல்

ஜனநாயகத்தின் தூண்களைப் பலமாக்குவேன் என்று உறுதிகூறி பதவிக்கு வந்த சந்திரிகாவின் பொதுசன ஐக்கிய முன்னணி அரசு, இன்று, அந்தத் தூண்களில் ஒன்றைத் தானே இடித்துத் தள்ளியுள்ளது.

செய்தித் தணிக்கைக்கு உத்தரவிட்டதுடன் சந்திரிகா அம்மையாரின் "ஜனநாயக வேஷம்" முழுமையாகவே கலைந்துவிட்டது.

இராணுவச்செய்திகள் வெளியில் கசிவதால் சிங்களப் படைத்துறை பல சிக்கல்களை எதிர்கொள்கின்றது என்பது, செய்தித் தணிக்கைக்கு அரசு கூறும் காரணிகளில் ஒன்று.

இன ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செய்திகள் பிரசுரிக்கப்படக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவது என்பது அரசு கூறும் மற்றொரு காரணம்.

சந்திரிகா அம்மையாரின் அரசியல் நேர்மையைப் போலவே. இந்த இரண்டு காரணங்களும் போலியானவை.

'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கையின்போது அரசுப் படைகள் பெற்ற உடனடி வெற்றிகளைக் கண்டு புளகாங்கிதம் அடைந்த சிங்களத் தளபதிகள், தாம் பெற்ற வெற்றியை வரைபடங்கள் வாயிலாக விளக்கி, பத்திரிகைகளுக்கு அறிக்கைமேல் அறிக்கைகளை விடுத்தபோது, அவற்றைப் பார்த்து அரசுத் தலைவர்கள் அகமகிழ்ந்து – ஆரவாரித்தனர்; பெற்ற இராணுவ வெற்றியை எங்ஙனம் ஒரு அரசியல் வெற்றியாக மாற்றி எடுக்கலாம் என்று மந்திராலோசனை செய்து, அதையும் பகிரங்கப் படுத்தினார்கள்.

சிங்கள மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தபடி இருந்த இந்த இராணுவச் செய்திகளை, 'நேர்முக வர்ணனை செய்ததுபோல' அரசின் செய்தி நிறுவனங்கள் வெளியிட்டன.

இராணுவ நகர்வுகள் பற்றிய வரைபடங்களையும் - சண்டை முனைகளில் படையினர் எடுத்த வீடியோச் சுருள்களையும் செய்தி நிறுவனங்களுக்கு வழங்கிய அரசு, 'ரூபவாகினி'யிலும் திரும்பத்திரும்ப ஒளிபரப்பிக் காட்டியதே! அப்போது அவற்றை, கசியும் இராணுவத் தகவல்களாக அரசு நோக்கவில்லையே!

ஆனால், வடபுலக் கடலில் 'டோறா'க்கள், அடுத்தடுத்து மூழ்கடிக்கப்பட்ட செய்திகளையும் - கிழக்குப் போர்முனையில் சிங்களப் படைகள் பலவீனப்பட்டு வரும் செய்திகளையும், உள்நாட்டு – வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் வெளியிடத் தொடங்கியபோது, அவற்றைக் 'கசியும் தகவல்களாகவும்' – இராணுவத்திற்கு சிக்கல்களை உண்டுபண்ணும் செய்திகளாகவும் அரசு, பார்க்கின்றதே! இவை ஏன்?

### வெற்றிக்குத் தேவை விளம்பரம் - தோல்விக்குத் தேவை தணிக்கையோ!

அரசு கூறியுள்ளதுபோல இனவாதச் செய்திகள் இன ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் செய்தித் தணிக்கைக்காக சந்திரிகா அரசு இந்த வாதத்தை வைத்தது. இன ஒற்றுமைக்கு உரம்போடும் நோக்கத்துடன் அல்ல. ஏனெனில், தமிழ் மக்களுக்கு எதிராக பொருளாதாரத் தடையை விதித்து – அவர்கள்மீது கண்மூடித்தனமான முறையில் எறிகணை வீசியும் விமானக் குண்டுகளை விதைத்தும் – அவர்களைக் கொன்றுதள்ளுகின்றதே! அரசின் இந்த ஈனச்செயல் இன ஒற்றுமைக்கு நீர் வார்க்கும் ஒன்றா?

### விடுதலைப் புலிகள் – Liberation Tigers Of TAMIL EELAM – புலிகளின் குரல்

எனவே, செய்தித் தணிக்கைக்கான உண்மைக் காரணம், அரசு சொல்வதைப் போல, 'தகவல் கசிவைத் தடுப்பதோ' அல்லது 'இனவாதச் செய்திகளை தடுப்பதோ' அல்ல; மாறாக, அரசுப் படைகள் சந்தித்துவரும் இராணுவத் தோல்விகளை சிங்கள மக்களுக்கு மறைக்கவும். இந்தத் தோல்விகளின் விளைவாக எழும் அரசுக்கெதிரான கண்டன விமர்சனங்களைத் தடுத்து – தமது அரசைப் பாதுகாக்கவும், அத்துடன் தமிழ் இனப் படுகொலையைச் சர்வதேசத்தின் காதுகளுக்கு எட்டாது தடுப்பதற்காகவுமே, செய்தித் தணிக்கைமுறையை அரசு நடைமுறைப்படுத்துகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணப் படையெடுப்பிற்கான முன்னேற்பாடுகளில் சந்திரிகா அரசு தீவிரமாக இறங்கியிருப்பது அனைவரும் அறிந்த செய்தி. அத்தகையதொரு படைஎடுப்பின்போது அரசுப்படைகள் செய்யப்போகும் தமிழ் இனப்படுகொலையை மறைப்பதற்கும், சில முன்னேற்பாடுகளை அரசு செய்துள்ளது. அதில் பிரதானமானது. இந்தச் செய்தித் தணிக்கைமுறையாகும். கொழும்பிலுள்ள வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களுக்கு இனப்படுகொலைச் செய்திகள் எட்டுவதை இந்தச் செய்தித் தணிக்கைமுறை தடுக்கும் என, அரசு நம்புகின்றது;

எனவே, தனது படையினர் செய்யப்போகும் தமிழ் இனப் படுகொலைகளுக்கு உலக அரங்கில் ஒரு பூரண இருட்டடிப்பைச் செய்யலாம் எனறும், அரசு கருதுகின்றது.

ஆனால். அரசின் இந்த ஆசை நிறைவேறப்போவதில்லை என்பதற்கு, அண்மையில் நடந்த நாகர்கோவில் படுகொலைச் செய்திகள் மிக விரைவாகவே வெளி உலகிற்குச் சென்றதைக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகளின் சர்வதேச தலைமையகத்திற்கு சென்றடைந்த இந்தப் படுகொலைச் செய்தி – உடனடியாகவே – உலகச் செய்தி நிறுவனங்களால் உலகு முழுவதும் பரப்பப் பட்டது.

செய்திப்பரிவர்த்தனையில் புலிகள் இயக்கம் கண்டுள்ள முன்னேற்றம். சந்திரிகா அரசின் செய்தித் தணிக்கை முறையை தோற்கடிக்கப் போகின்றது என்பதுதான் உண்மை. ○

# இராணுவச் செய்திகள்பற்றிய அரசின் பொய்ப்பிரச்சாரம்

உண்மைகள் ஆபத்தானவையாகத் தென்படும்போது பொய்த் தகவல்களை வெளியிட்டு, மக்களுக்கு உண்மை நிலைவரங்களை மறைப்பது, தன்னல அரசியல்வாதிகளின் வழமை.

வட - கிழக்கின் இராணுவ நிலைமையை மதிப்பீடு செய்தால், அதில் புலிகளின் கைகள் ஓங்கியிருக்கின்றன என்ற உண்மையைக் கண்டுகொள்ள முடியும். இந்தக் கள யதார்த்தத்தை சிங்கள மக்கள் ஏற்கத் தயாராக இருக்கின்றார்களோ இல்லையோ, இந்த உண்மை சிங்கள மக்களிடம் போய்ச் சேர்ந்துவிடக்கூடாது என்பதில், சிங்கள அரசு அக்கறையாக இருக்கின்றது.

இராணுவம் சந்தித்துவரும் தோல்விகள் மற்றும் இழப்புகள் பற்றிய செய்திகள் சிங்கள மக்களிடம் சென்று சேர்ந்தால், சிங்கள தேசத்தின் உள உறுதி பாதிக்கப் பட்டுவிடும் என்ற பயத்திலும், இராணுவத் தோல்விகள் மறைக்கப்படுகின்றன. அதேவேளை, 'இனப்பிரச்சினைக்குத் தீர்வு யுத்தம்' என்று பிரகடனப்படுத்திய பின்னர் இராணுவம் தோல்விகளையே அடுத்தடுத்துச் சந்திக்குமானால், அது அரசின் கொள்கைப் பிரகடனத்திற்கு ஏற்பட்ட தோல்வியாகப் பார்க்கப்பட்டு - அரசின் வீழ்ச்சிக்கும் அடிகோலிவிடலாம் என்ற பயமும் - ஆளுங் கட்சியினரிடம் இருக்கின்றது.

எனவே, 'தோல்வியை மறை: வெற்றியைக் கொண்டாடு' என்ற நிலைமைக்கு சிங்கள அரசு தள்ளப்பட்டுள்ளது. அரசு இத்தகையதொரு மனநிலையுடன் இருப்பது, இராணுவ உயர் தளபதிகளுக்கு வாய்ப்பாகிப்போய்விட்டது.

தமது கட்டளையின் கீழுள்ள படையணிகள் புலிகளுடனான சண்டைகளில் பெரிய உயிரிழப்புக்களைச் சந்திக்கும்போது, அந்தத் தோல்விகள் தனிப்பட்ட முறையில் தமது கௌரவத்தையும் - பதவி உயர்வுகளையும் பாதித்துவிடலாம் என்பதால், அந்தச் சண்டைகளில் ஏற்பட்ட உயிரிழப்புச் செய்திகளைத் தமக்குச் சார்பாகத் திரித்து வெளியிடுகின்றனர். இராணுவத்தின் உயிரிழப்பை மறைக்க முடியாத நிலை வரும்போது, அந்தத் தொகையைவிட அதிகளவு எண்ணிக்கையான புலிகள் கொல்லப்பட்டனர் என்று, பொய்த் தகவல்களை வெளியிடுகின்றனர். இதை ஒருவித மனத்திருப்தியுடன் சிங்கள தேசமும் ஏற்றுக்கொள்கின்றது.

தன்னலத்திற்காக இந்தப் பொய் வியாபாரத்தில் ஈடுபடும் இராணுவத் தளபதிகள், பதவி விலகிய பின்னர், தமக்கு மேலேயுள்ள அதிகாரிகளின்மேல் இந்தப் பழியைப் போடும் நிகழ்ச்சிகளையும் சிங்களப் படைத்தரப்பில் அடிக்கடி காணலாம்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல்நூற்றுக்கணக்கான தமிழர்களின் சாவுகளுக்குக் காரணமானவர், முன்னாள் கிழக்கு மாகாணத் தளபதியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, என்பது குறிப்பிடத்தக்கது. தமிழர்களை மட்டுமல்ல, ஜே. வி. பி. காலத்தில் பெருந்தொகையான சிங்கள மக்களது சாவிற்கும் இவரே காரணர் என்பது, பொதுவான ஒரு குற்றச்சாட்டு. இராணுவச் செய்திகளில் சிங்களத் தளபதிகள் காட்டிய பொய்க் கலப்புக்களை, லக்கி அல்கம அவர்கள், சண்டே லீடர் இதழிற்கு அளித்த செவ்வி ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார் அந்தச் செவ்வியின் ஒரு பகுதி இவ்வாறு தான் உள்ளது: "வட - கிழக்குப் போரில் செத்தவர்களின் தொகையைவைத்து ஒரு எண்ணிக்கை விளையாட்டுத்தான் கடந்த காலத்தில் இங்கே விளையாடப்பட்டது. புலிகளின் சாவு எண்ணிக்கைகளைக் கூட்டிச் சொல்வதும். படையினரின் சாவு எண்ணிக்கைகளைக் குறைத்துச் சொல்வதும் படையினரின் ஒரு வழமை. இந்தப் புள்ளி விபரங்கள் எல்லாம் உண்மையாக இருந்திருக்குமானால், இப்போது, இந்தப்பகுதியில் எவருமே - அது புலிகளோ அல்லது மற்றவர்களோ - இருந்திருக்கமாட்டார்கள்."

இத்தகைய 'எண்ணிக்கை விளையாட்டில்' ஈடுபட்ட சிங்களத் தளபதிகளில் மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவும் ஒருவராவர். படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களை "புலிகள்" என இவரும் கணக்குக் கூறியிருந்தார்.

இராணுவச் செய்திகள் தொடர்பாக அரசு செய்யும் மிகைப்படுத்தல்களையும் - குறைத்துக் காட்டல்களையும் கண்டன விமர்சனம் செய்துள்ள ஒரு சிங்கள இராணுவ ஆய்வாளர் (வார மத்தி பாதுகாப்பு நிலைவரம் - 'ஐலண்ட்') இது அரசு எதிர்பார்ப்பதைவிட பாதக விளைவுகளையே சிங்கள மக்களிடமும் - படையினர் மத்தியிலும் உருவாக்கும் என்று எச்சரித்துள்ளார்.

ஆனால், இராணுவச் செய்திகள் பற்றிய பொய்த் தகவல்களும் அரசுக்குத் திருப்தியைக் கொடுக்காததால், இப்போது, அனைத்து இராணுவச் செய்திகளையும் தடைசெய்து' திருப்திகாண முனைகின்றது போலும்!. ○

www.eelamview.com

# புதிய போர்முறைத் திட்டம்:

# சிங்களப் படைகளுக்கு இது, பலமா பலவீனமா?

முன்னைய அரசின் போர்முறைத்திட்டம் இதுதான் -

கிழக்கு மாகாணத்தை இராணுவத்தின் இரும்புப் பிடிக்குள் வைத்தபடி, வடக்கே ஒரு முற்றுகைப் போரை நடாத்திப் புலிகளைத் தோற்கடிப்பது.

இப் போர்முறைத் திட்டத்தின் தோல்வி காரணமாக, தற்போதைய அரசு, அதை அடியோடு மாற்றிவிட்டது.

புதிய அரசு வகுத்துள்ள புதிய போர்முறைத் திட்டம் இதுதான் -

முகாங்களுக்குள் துருப்புக்களை முடக்கி வைத்திருந்து தற்காப்புப் போரை நடாத்துவதற்குப் பதிலாக, இடைவிடாது - தாக்குதல் போர்முறைமூலம் - துருப்புக்களை நகர்த்தியவாறு, வட புலத்தைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றி - புலிகளின் முதுகெலும்பை உடைப்பது.

இது ஒரு கவர்ச்சிகரமான போர்முறைத் திட்டம். சிங்களப் பேரினவாத பூதத்தின் நாவில் உமிழ்நீரை ஊறச் செய்யும் ஒரு இராணுவத் திட்டம்.

இந்தப் புதிய போர்முறைத் திட்டத்திற்கு ஏராளமான துருப்புக்கள் வேண்டும்; அதுதான், கிழக்கில் இருந்தும் தெற்கில் இருந்தும் முடிந்தளவுக்கு படைகளை, அரசு வடக்கே அனுப்பிக்கொண்டிருக்கின்றது. இதுவும் சிலவேளை போதாது போய்விடலாம் என்ற கணிப்பில்தான் என்னவோ, கட்டாய இராணுவ சேவை பற்றி சந்திரிகா அம்மையாரே கதைக்கத் தொடங்கியுள்ளார்!

கிழக்கில் இருந்து பல முகாங்கள் அப்புறப் படுத்தப்பட்டுவருவது, தெற்கில் பல சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது. '' சந்திரிகா அரசு கிழக்கைப் புலிகளிடம் தாரைவார்க்கின்றது'' என, எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன. ஆனால், பாதுகாப்பு பிரதி அமைச்சர் ரத்வத்த அவர்கள், தமது அரசின் போர்முறைத் திட்டம் பற்றி வேறுவிதமாக விளக்குகின்றார்.

கிழக்கில் படையினர் வீணே முகாங்களுக்குள் முடங்கிக்கிடக்கின்றனர்; இது பயனற்றது. முகாங்கள் அமைத்தல் என்ற தந்திரோபாயத்தை விட்டுவிட்டு, அதற்குப் பதிலாக வேறு ஒரு போர்த் தந்திரத்தைப் பயன்படுத்த அவர் விரும்புகின்றார். அதாவது, புலிகளின் கோட்டைமீது ஒரு இடைவிடாத போரைத் தொடுப்பதே ரத்வத்தவின் ஆசையாக இருக்கின்றது. புலிகளின் ஒட்டுமொத்த பலத்தையும் போர்முனைக்கு இழுத்து - அதை அழிக்கவும். மக்கள் என்ற சமுத்திரத்தில் இருந்து புலிகள் என்ற மீன்களைப் பிடித்து அப்புறப்படுத்திவிட்டு, அதற்குப் பதிலாக, சிங்கள மீன்களை வளரவிடும் ஆசையுடனும் சந்திரிகா - ரத்வத்த தலைமை இருக்கின்றது.

இந்தப் போர்முறைத் திட்டத்தை அமுல்படுத்த அதிக ஆட்பலம் மட்டுமல்ல, அதிக படைக்கல சக்தியும்; அத்துடன் உலக நாடுகளின் ஆதரவும் அரசுப் படைகளுக்குத் தேவை.

ஆட்பலத்தைப் பொறுத்தவரை இதுவரை, சுமார் 40,000 படையினரை வடபுலத்திற்கு அரசு நகர்த்திவிட்டது என்று கொழும்புச் செய்திகள் தெவிக்கின்றன. இதேபோல, பெருந்தொகையான படைக்கல சக்தியையும் வெளிநாடுகளில் இருந்து அரசு கொள்வனவு செய்துவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், போருக்கு ஆதரவான 'உலக நாடுகளின் ஆதரவு' என்ற விடயம் அரசை மகிழ்விக்கவில்லை. ஆயினும், உலக நாடுகளின் கருத்துக்களைக் கருத்தில் எடுக்காது தமது போர்த் திட்டங்களை நிறைவேற்ற, சந்திரிகா அரசு தயாராகிவிட்டது.




இந்தப் புதிய போர்முறைத் திட்டத்தை, அரசு முழுமைப்படுத்த, 'முன்னோக்கிப் பாய்தல்' ஒரு படிப்பினையைக் கொடுத்துள்ளது. அதாவது, 'ஒருமுனை நகர்வு' என்பது அபாயத்திற்குரியது என்பதே அதுவாகும். எனவேதான், புலிகளின் பலத்தைச் சிதறச் செய்வதற்காக, 'பலமுனை நகர்வு' என்ற தந்திரோபாயத்தை படைத் தலைமை தேர்ந்தெடுத்துள்ளது.

எனினும், புதிய போர்முறைத் திட்டத்திற்கு உள்ள பிரதான பலவீனம் யாதெனில், அதன் வழங்கல் பாதை தொடர்பாக உள்ள இடர்ப்பாடுகள்தான். 40,000 துருப்புக்களை குடாநாட்டிற்குள் குவித்துவிட்டு - இடைவெளி அற்ற பெரும் போரைத் தொடக்கினால், அந்த ஆட்பலத்திற்கு வேண்டிய அனைத்து வகை விநியோகங்களையும், மருத்துவப் பிரயாணங்களையும் எவ்வாறு நிறைவேற்றுவது? கடலைப் பயன்படுத்தலாம் என்ற நம்பிக்கை படைத்தலைமைக்கு இருக்கமாட்டாது. கடலிற்கு மேலே உள்ள வான் பாதையைப் பயன்படுத்தி இந்தப் பாரிய தேவையை ஈடுசெய்யும் சக்தி, சிங்கள வான்படைக்கு இல்லை. அத்துடன், கடலுக்கு மேலே உள்ள வானம், சிறீலங்காவின் விமானங்களுக்குப் பாதுகாப்பானது என்று யாரால் உத்தரவாதம் அளிக்கமுடியும்?

இதேவேளை, 'பலமுனை நகர்வு' என்ற விடயத்தில், தரைப்படைக்கு பாதகமான அம்சங்கள் சில உள்ளன. படையினரின் தரை நகர்வின் இன்றைய நம்பிக்கை நட்சத்திரம் விமானங்கள் அல்ல; டாங்கிப் படையணிகள் ஆகும். ஆனால், பலமுனை நகர்வுகளுக்குத் தேவையான அளவு டாங்கிகளின் எண்ணிக்கை சிங்களப்படையிடம் இல்லை. எனவே, புலிகளின் பலத்தைச் சிதறடிக்க முடியும் என நினைத்துக்கொண்டு, பல முனைகளூடாக - பலவீனமான டாங்கி அணியுடன் - சிங்களப் படைகள் நகருமானால், அது சிங்களப் படை தரப்பில் பாரிய உயிரிழப்பையே உண்டுபண்ணும்.

அரசுப் படைகளின் புதிய போர்முறைத் திட்டத்தை முறியடிக்க, புலிகளுக்கு இரண்டு விடயங்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றன. ஒன்று, எதிரியின் பலமுனை நகர்வைத் தடுப்பதற்குவேண்டிய ஆட் பலம்; அடுத்தது, படைக்கல சக்தி - அதாவது எறிகணைகள், ரவைகள், குண்டுகள்.

புலிகளின் ஆட்பலம் அதிகரிக்குமானால் எதிரியின் பலமுனை நகர்வைத் தடுப்பதென்பது புலிகளுக்கு இலகுவாகிவிடும். அத்துடன் அதிகளவு படைக்கல சக்தியை எதிரிமீது பயன்படுத்தும் திறன் புலிகளுக்கு இருக்குமானால், போராளிகள் தரப்பில் உயிர் இழப்புக்களைப் பெருமளவு தவிர்க்கலாம்; அதேவேளை, எதிரிப்படையின் இழப்பைக் கூட்டலாம் இந்த படைக்கல சக்திப் பயன்பாட்டிற்கு பணபலம் தேவை. எனவே, தேவையான ஆட்பலத்தையும் - பணபலத்தையும் புலிகள் இயக்கம் பெற்றுக்கொண்டால் எதிரியின் புதிய போர்முறைத் திட்டத்தை முறியடிக்கலாம்.

சிங்கள அரசு வரைந்துள்ள இந்தப் புதிய போர்முறைத் திட்டம் வெற்றி பற்றிய முழு நம்பிக்கையுடனேயே வரையப்பட்டுள்ளது. ஆனால், இது தோல்விகண்டால் வடபுலத்திலுள்ள சிங்களப் படைகளுக்கு என்ன நடக்கும் என்பதையும், எமது மக்கள் தெரிந்துவைத்திருப்பது நல்லது.

அதிகூடிய இலாபத்தை மிகவிரைவில் அடையும் ஆசையுடன் சந்தை நிலைவரங்களைச் சரியாக எடைபோடாது - பல இடங்களிலும் இருந்த தனது முதலீடுகளை எடுத்து, ஒரு இடத்தில் முதலிடும் வணிகன் ஒருவனின் நிலையில்தான், இப்போதைய அரசின் போர்முறைத் திட்டம் உள்ளது. இந்த வியாபாரம் வெற்றி பெறுமா தோல்வி அடையுமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

ஆனாலும், இந்த போர்முறைத் திட்டம் அரசுப்படைகளுக்குத் தோல்வியைக் கொடுக்குமானால், வடபுலத்தில் குவிக்கப்பட்டிருக்கும் அனைத்துப் படையினரும், 'கரைவலைக்குள் அகப்பட்ட மீன் கூட்டத்தைப் போலவே' ஒரு பேரழிவைச் சந்திப்பர். இதைச் சாதிப்பதற்கு புலிகளுக்கு ஆட்பலம் தேவை.

புலிகளுக்குத் தேவையான ஆட்பலத்தை எமது மக்கள் வழங்குவார்களானால், சந்திரிகா அரசின் புதிய போர்முறைத் திட்டத்தின் தலைவிதியையே மாற்றிவிட முடியும். அப்படி நடந்தால், அதனால் வரும் விளைவுகளைத் தாங்க முடியாது. சிங்கள தேசம் தனது கண்களை மூடிக்கொண்டு விக்கி விக்கி அழவேண்டியதுதான்......! ○

# உணர்வின் உணர்வு!

மிருகங்களுக்கெல்லாம் பெரிய சந்தோஷம்!

பட்சிகளுக்கும் தான்!

ஏன்?

அது காடல்ல; வேதனையோடு கூறவேண்டும், அது ஒரு மிருகக் காட்சிச் சாலை!

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பது அவைகளுக்குத் தெரியும்! ஏராளமான மக்கள் தங்களைப்பார்க்க வருவார்கள்!

இதையிட்டு அந்த விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் பெரும் மகிழ்ச்சி! அவற்றில் பெரும்பாலானவை இங்கேயே பிறந்தவை!

அதிலும் குரங்குக் கூட்டைப் பார்க்கவேண்டுமே! ஒரே குதிப்பும் பாய்ச்சலும்தான்! கிறாதி போடப்பட்ட விசாலமான அடைப்பு உள்!

பக்கத்தில் ஒரு குறுகிய இரும்புக் கம்பியிடப்பட்ட கூண்டு. அதனுள் சமீபத்தில் வந்த ஒரு மந்தி அமர்ந்திருக்கிறார். 'ராஜன்' என்ற பெயர்ப்பலகை அங்கு தொங்குகிறது. ஆனால் 'ராஜன்' சிரிக்கவும் இல்லை, குதிக்கவும் இல்லை! கறுவிய உணர்வொன்றே தெரிகிறது.

ஆமாம், இது ஒரு அரசாங்க மிருகக் காட்சிச் சாலை. விலங்குகளுக்கும் பார்க்க வருபவர்களுக்கும் ஓர் இயற்கைச் சூழலைப் போன்ற காட்சியை தந்து நிற்கும், பரந்த பல ஏக்கர் நிலம் கொண்ட காட்சிச் சாலை இது.

'ராஜனின்' கூண்டுக்கு அருகே - தனித்து விடப்பட்ட ஒரு பெரிய பாலைமரம்.

அதன் கிளைகளில் வெளிக் குருவிகள் சில தங்கி அமர்ந்து பறந்து செல்கின்றன. அணில் தாவிப் பாய்ந்து கீச்சிடுகிறது.

அமர்ந்திருந்த 'ராஜனின்' பெருமூச்சு காற்றுக்கு அனல் பாய்ச்சுகிறது.

''கா - கா'' என்றபடி காகங்கள் பல சிறகடித்துச் செல்கின்றன.

வானில் மிக உயர, பருந்து வட்டமிட்டு மிதப்பது தெரிகிறது.

'ராஜன்' மேலே பார்க்கிறான். பெருமூச்சே எழுகிறது.

அந்தப் பாலைமரத்தின் கிளையொன்று தலையசைத்துக் குரல் தருகிறது.

''நீ எவ்விதம் இங்கு வந்தாய்?''

''வரவில்லை.பிடிபட்டுக் கொண்டு வரப்பட்டேன்.''

''அதுதான் பிழை! நீ அடிக்கவில்லையா?''

''அதற்கு முன்......'' எனத் தொடங்கிற்று மந்தி.

''ஆமாம், அதுதான் பிழை! அடியாதவன் பிடிபட வேண்டியவன் தான்!''

''உன் நகம், உன் கடினமான பல் எதற்கு?'' - இவ்விதம் அணிலின் கீச்சிடும் ஒலி அறைந்தது.

'ராஜன்' பேசாது அமர்ந்திருந்தான். ஆனால் அவனது மூச்சு மேலும் கனன்று எழுகிறது. அனல் என மாறுகிறது. அன்று மாலை -

வேடிக்கை காட்ட உள்ளே கைவிட்ட பார்வையாளர் ஒருவரின் கைவிரல் துண்டமாகியது!

என்ன நடந்தது எனத் தடிகொண்டுவந்த வேலையாள் ஒருவனும் அருந்தப்புத் தப்பினான்!

'அதற்கு விசரோ தெரியாது' எனப் பார்வையிட வந்த மிருக வைத்தியரும் முன்பு ஒருபோதும் கண்டறியாத் தாக்குதலுக்கு உள்ளாகிக் கீறல்பலவுடன் ஒரு கண்ணையும் இழந்தார்!

இது சிறு விடயம் அல்ல. தீர்ப்பு வழங்கப்பட்டது.

மறுநாள் ராஜனின் உயிரற்ற உடல் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தது.

அவன் வாழ்ந்த காட்டில் சுதந்திர இனங்கள் அனைத்தும் வாழ்ந்து கொண்டே இருக்கின்றன. மரக் கிளைகள் அசைந்து துள்ளி ஆடுகின்றன! கட்டெறும்பு தலைநிமிர்த்தி விரைகிறது. அணில் ஒலி எழுப்புகிறது. குருவிகள் மீண்டும் முட்டையிட்டுப் பொரிக்கின்றன. உயிர்கள் பயமறியாத துணிவோடு வாழ்கின்றன.

அங்கு அழியாத உணர்வாக - விடுதலை உணர்வின் உருவாக ராஜனும் வாழ்கிறான்.

– நாக. பத்மநாதன் ○

www.eelamview.com

# குருதிக்கொடை உயிர்களைக் காப்பாற்றும்; பணக்கொடை ஒரு தேசத்தைப் பாதுகாக்கும்!

இன்றைய போராட்ட வளர்ச்சிக்கு காரணமான பிரதான விடயங்களில் ஒன்று, முன்னர், மீட்புநிதிக்கு மக்கள் வழங்கிய இரண்டு பவுண் ஆகும். விமானங்கள் வீழும்போதும், கப்பல்கள் மூழ்கும்போதும், படைமுகாம்கள் வெற்றிகொள்ளப்படும்போதும் மீட்புநிதிக்கு மக்கள் செலுத்திய பவுண்கள்தான் நினைவுக்கு வருகின்றன. எனவே, எமது போராட்டம் பெற்றிருந்த அந்த இராணுவ வெற்றிகளை, மீட்புநிதிக்குப் பங்களித்த மக்களும் பங்கிட்டுக்கொள்ளலாம்.

மக்களிடமிருந்து மீட்புநிதிபெற்று 4 வருடங்கள் முடிவடைந்துவிட்டன. இந்த 4 வருட காலத்தில் புலிகள் இயக்கம் பெருமளவு வளர்ந்துவிட்டது. அதன் ஆட்பலம் அதிகரித்துவிட்டது. பல படையணிகள் புதிதாக உருவாக்கப்பட்டுவிட்டன. அதனால் அதற்கதற்கே உரித்தான ஆயுத வகைகளின் தேவையும் அதிகரித்துவிட்டது. ஆட்பலமும் - ஆயுததேவையும் அதிகரித்துவிட்டதால் , நிதித்தேவையின் அளவும் பெருகிவிட்டது.




போர்க்களங்களில் புலிவீரர்கள் காட்டும் போர்திறனுக்கும் - துணிவுக்கும் சிங்களச் சிப்பாய்களால் ஈடுகொடுக்க முடியாதுள்ளது என்ற விடயம் சிங்களத் தளபதிகளுக்கே நன்கு தெரியும். அதனால் இப்போது (மூன்றாம் ஈழப் போரில்) சிங்களத் தளபதிகள் ஒரு புதிய போர் உபாயத்தை பயன்படுத்துவதில் அக்கறை காட்டுகின்றனர். அதாவது படைக்கல சக்தியை அதிகம் பயன்படுத்தி புலிகளோடு சண்டையிடுவது என்பதுவே அதுவாகும். படைக்கல சக்தி (Fire Power) என்றால் ..... எறிகணைகள், பீரங்கிக் குண்டுகள் விமானக் குண்டுகள் மற்றும் எல்லா வகை எறிகுண்டுகளுடன் துப்பாக்கி ரவைகளையும் குறிப்பிடலாம்.

அதாவது. துப்பாக்கி ஏந்திய சிங்களச் சிப்பாய்கள் சண்டைகளில் செய்ய முடியாததை- கருவிகள் மூலம் ஏவப்படும் - வெடிப்பொருட்களைப் பயன்படுத்தி. தூர இருந்தபடி, செய்ய முனைவதே சிங்களத் தளபதிகளின் இப்போதைய நோக்கமாகும். சண்டைகள் நடைபெறும்போது - துப்பாக்கிவீச்சு எல்லைக்குள் இருபகுதிப் படைகளும் சந்திக்க முன்னரே - பல்லாயிரக்கணக்கில் எறிகணைகளையும் - பீரங்கிக் குண்டுகளையும் புலிகளைநோக்கி ஏவிவிட்டு, புலிவீரர்களை அழிக்கச் சிங்களப்படை முயல்கின்றது. அதேவேளை, இரு பகுதியினர்க்கும் இடையே துப்பாக்கிச் சண்டைகள் ஆரம்பமானதும் புலிகள் பக்கத்தில் இழப்பை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் - ஒவ்வொரு சண்டையிலும் - இலட்சக்கணக்கான ரவைகளை சிங்களச் சிப்பாய்கள் தண்ணீர்போலச் செலவுசெய்கின்றனர்.

ஒப்பறேசன் முன்னோக்கிப் பாய்தலின் போது இந்தத் தாக்குதற் தந்திரத்தையே சிங்களப் படைகள் பயன்படுத்தியிருந்தனர். இதுபோலவே மணலாற்றுப் பகுதியில் அமைந்திருந்த ஐந்து இராணுவமுகாம்கள் மீது புலிவீரர்கள் தொடுத்த பாரிய தாக்குதலை முறியடிக்க சிங்களப்படைகள் பிரமாண்டமான தொகையிலான படைக்கல சக்தியை பயன்படுத்தியிருந்தது. சிலநாட்களுக்கு முன்னர், சுன்னாகம் நோக்கிப் படையினர் முன்னேற முயன்றபோதும் இவ்விதம் பிரமாண்டமான தொகையில் படைக்கல சக்தியைப் பயன்படுத்தியே வெல்ல முயன்றனர். குடாநாடு மீதான படையெடுப்பிற்கு பயன்படுத்துவதற்காக 80, 000 எறிகணைகள் வடபுலத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. இதில் பத்தாயிரம் எறிகணைகளையாவது இதுவரை எதிரி பயன்படுத்தியிருப்பான் என எண்ணலாம்.

சண்டைகளின் போது தமது படையாட்களின் இழப்புக்களை தவிர்ப்பதுடன் - புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் சுலபமான முறையில் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தும் நோக்குடன் சிங்களத் தளபதிகள், இந்தப் படைக்கல சக்தியை பெருமளவில் பயன்படுத்துகின்றனர்.

இதே படைக்கல சக்தியை சிங்களப் படைகள் மீது, புலிகளும் திருப்பிப் பயன்படுத்தினால் படையினர் அதிக எண்ணிக்கையில் உயிர் இழப்புக்களைச் சந்திப்பர். ஆனால் புலிகளிடம் அந்தளவுதொகைப் படைக்கல சக்தி இல்லை. ஒரு சமரில் இராணுவம் ஆயிரம் எறிகணைகளை ஏவினால் அதற்குப் பதிலாக புலிகள் பத்து அல்லது இருபது எறிகணைகளையே ஏவக்கூடிய நிலையில் இருக்கின்றனர். அதேபோல புலிகளின் ஒரு காவல் அரணைத் தாக்க. படையினர் பல்லாயிரக்கணக்கான ரவைகளைச் செலவிடுவர். ஆனால் படையினரின் ஒரு காவல் அரணைத் தகர்க்க புலிகள் சில பத்து அல்லது ஒருசில நூறு ரவைகளையே பயன்படுத்துகின்றனர்.

ஏனெனில் எறிகணைகள், ரவைகள் உட்பட எல்லாவகை எறிகுண்டுகளும் விலை கூடியவை. இதைவிட இவற்றை ஏவும் கருவிகளின் விலை மிக அதிகம். அத்துடன் இவற்றை 'டொலர்' பணம் கொடுத்தே கொள்வனவு செய்ய முடியும். ஒரு எறிகணையின் பெறுமதி 100 டொலர். டொலர்க் கணக்குப் பார்த்தால் அது ஒரு சிறு தொகை. ஆனால் அதை எமது ரூபாவிற்கு மாற்றிப் பார்த்தால் அது ஐயாயிரம் ரூபாவாக இருக்கும். எனவே நாம் ஒரு எறிகணை வாங்க 5,000 ரூபா செலவளிக்க வேண்டியுள்ளது. ஆனால் ஒரு செக்கனில் அந்த எறிகணை செலவளிந்துவிடும். போராட்டப் பங்களிப்பாக ஒருவர் ஐயாயிரம் ரூபா பணத்தை இயக்கத்திற்குக் கொடுகின்றார் என்று வைத்துக்கொண்டாலும்அவர் கொடுத்த பணம் ஒருஎறிகணை வாங்கத்தான் காணும்; அதுவும் ஒரு செக்கனில் செலவழிந்துவிடும். இதனால் தான் சிங்கள அரசு பெருந்தொகைப் பணத்தை போரிற்கெனச் செலவிடுகின்றது.

சிங்கள அரசு வருடாந்தம் 4,000 கோடி ரூபாவை போரிற்கெனச் செலவிடுகின்றது. ஆனால் புலிகள் இயக்கம் வருடாந்தம் 180 கோடி ரூபாவையே செலவிடக்கூடிய நிலையில் உள்ளது. இந்தப் போர்ச் செலவைப் புலிகள், இரண்டு மடங்காக அதாவது 360 கோடி ரூபாவாக உயர்த்துவார்களாக இருந்தால் எமது போராட்டம் இழப்புக்களைக் குறைத்து விரைவாக முன்னேறும்.

ஒரு இராணுவ நடவடிக்கை மூலம் சிங்களப்படைகள் எமது ஊர்களுக்குள் புக முனையும்போது - சிங்களப்படைகள் ஏவுவதுபோல - புலிகளும் எறிகணைகளை ஆயிரக்கணக்கில் ஏவினால் சிங்களப்படைகள் சிதறி ஓடும். ஆனால், உண்மையில் அவ்வாறு நடப்பது இல்லை. எறிகணைகளை அதிக எண்ணிக்கையில் ஏவ முடியாது இருப்பதால்தான் எதிரிப் படைகள் விரைவாக எமது ஊர்களை ஆக்கிரமிக்கின்றன.

அன்பிற்குரிய எமது மக்களே! நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். எதிரிப் படைகள் மீது, நாமும் பாரிய தொகையில் படைக்கல சக்தியைப் பயன்படுத்தும் அதேவேளை எதிரியானவன் தனது படைக்கல சக்தியை எம்மீது பயன்படுத்தவிடாது தடுக்கும் ஆயுதங்களையும் நாங்கள் பெற்றுவிட்டால் வெற்றிக்குச் சொந்தக்காரர்களாக நாமே இருக்கலாம். விமான எதிர்ப்பு ஆயுதங்களை நாம் பெற்றுக்கொண்ட பின்னர் எதிரி விமானங்கள் தமது படைக்கல சக்தியை பயன்படுத்தமுடியாது தவிக்கின்றன. இதேபோல ஆட்லறி உபகரணத்தை நாமும் பெற்றுக்கொண்டால் பலாலியில் உள்ள எதிரிப் படைக்கு குலைப்பன் காய்ச்சலை உண்டுபண்ணலாம். ஆனால் இவற்றிற்குப் பெருந்தொகைப் பணம் வேண்டும். மக்கள் மனதுவைத்தால் இந்தப் பணத் தேவை என்பது ஒரு அற்பவிடையமாகிவிடும்.

ஒரு சிறிய நாடான இஸ்ரேல் தன்னைவிட 15 மடங்கு அதிக சனத்தொகை கொண்ட அரபு நாடுகளை போரில் வென்றிருக்கின்றது. இதற்கான பிரதான காரணங்களில் ஒன்று இஸ்ரேலிடம் உள்ள பிரமாண்டமான படைக்கல சக்தி ஆகும். பல அரபுநாடுகள் கூட்டாக இஸ்ரேலைத் தாக்கினாலும்கூட அந்தத் தாக்குதல்களின் வீரியத்தைச் சிதைக்கும் சக்தியை இஸ்ரேலியப் படைகளுக்குக் கொடுப்பது அதன் பிரமாண்டமான படைக்கல சக்தியாகும். பல ஆயிரம் அரபுப் படையணிகள் இஸ்ரேலை நோக்கி முன்னேறிவரும்போதே இஸ்ரேலியப் படைகள் - தமது ஆட்லறிகளையும் - டாங்கிகளையும் - விமானங்களையும் பயன்படுத்தி, அதாவது வெடிப்பொருட்களை மட்டும் பயன்படுத்தி அரபுப் படையணிகளைச் சிதறடிக்கின்றன. பின்னர் சிதைந்த அரபுப் படையணிகள் மீது பாயும் இஸ்ரேலியப் படைகள் அவற்றைத் துவம்சம்செய்து வெற்றியைப் பெறுகின்றன.

ஆனால் இதற்கு மாறான ஒரு உலக உதாரணமும் உண்டு பொஸ்னிய சண்டை பற்றி எமது மக்களும் அறிந்திருப்பர். பொஸ்னியா என்ற ஒரு அரசை அங்கு வாழும் முஸ்லிம்கள் பிரகடனப்படுத்தியிருந்தனர். ஆனால் அதை அருகில் இருந்த சேர்பியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இருபகுதியினருக்கும் இடையே போர் வெடித்தது. பொஸ்னிய முஸ்லிம்கள் மீது சேர்பியப் படைகள் தாராளமாக படைக்கல சக்தியைப் பயன்படுத்தி அவர்களைக் கொன்று தள்ளுகின்றனர். இதேவேளை பொஸ்னிய இராணுவத்திடம் ஏராளமான ஆட்பலம் உண்டு. ஆனால் அவர்களிடம் ஆயுத பலமும் - படைக்கல சக்திப் பலமும் இல்லாதிருப்பதால் அகதிகளாக இடம் பெயர்ந்தோடி அல்லல்படுகின்றார்கள். அத்துடன் போரில் தோல்வி கண்டபடி அழிந்து கொண்டிருக்கின்றனர்.

எனவே போரின் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் விடயங்களில் படைக்கல சக்தியும் ஆயுத பலமும் மிகமுக்கிய இடத்தை வகிக்கின்றன. ஆனால் இவற்றை இலவசமாக எங்கும் பெற்றுவிட முடியாது. பெருந்தொகைப் பணத்தைச் செலவளித்தே இவற்றைக் கொள்வனவு செய்ய முடியும்.

இப்படித்தான் யூத மக்களின் விடுதலைப் போரின் போதும் ஒரு சம்பவம் நிகழ்ந்திருந்தது. அதாவது மேலதிக ஆயுதங்களும் - படைக்கல சக்தியும் யூதப் போராளிகளுக்கு அவசரமாகத் தேவைப்பட்டது. ஆனால் அந்த விடுதலை இயக்கத்திடம் அவற்றை கொள்வனவு செய்வதற்கேற்ற பணம் இருக்கவில்லை. பணத்தை எங்காவது பெற்று படைக் கலங்களையும் - படைக்கல சக்தியையும் வாங்குவதா அல்லது ஒட்டுமொத்தமாக யூத மக்களே அழிந்துபடுவதா என்ற நிலை எழுந்தது. அப்போது யூத மக்கள் தங்களது சேமிப்புக்களில் பெரும் பகுதியை போராட்டத்திற்கென வழங்கி யூதப் போராளிகள் சந்தித்த நிதி நெருக்கடியை நீக்கி இஸ்ரேல் என்ற நாடு உருவாக உதவினர்.

இவ்விதம், ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு பணபலம் அவசியமாகின்றது. ஒரு மனிதனின் உடலுக்கு எலும்புகள் பலத்தைக் கொடுக்கின்றன. அந்தப் பலத்தை வைத்துத்தான் மனிதன் சவால்களுக்கு முகங்கொடுக்கின்றான். அதேவேளை அந்த எலும்புகளுக்கு உணவளித்து - அதை உறுதியாக வைத்திருக்க மனிதனின் குருதி உதவுகின்றது.

எமது இயக்கத்தின் ஆட்பலத்தை எலும்புகளுக்கும், நிதியை குருதிக்கும் ஒப்பிடலாம்.

எலும்புகளை செயற்படவைக்கும் சக்தி குருதிக்குண்டு.

ஆட்பலத்தை செயற்பட வைக்கும் சக்தி பணபலத்திற்குண்டு.

மனிதனுக்கு எலும்புகள் இல்லாதுவிடின் அவன் பலம் இழந்து போய்க்கிடப்பான்.

அப்போது அவனை காகங்கள் கொத்தித் தின்றுவிடும்.

மனிதனுக்கு குருதி இல்லாதுவிட்டால் அவன் இறந்துவிடுவான்.

மனிதனுக்கு எலும்பும் தேவை, குருதியும் தேவை.

அதேபோல, எமது தேசத்திற்கு ஆட்பலமும்தேவை, நிதிப்பலமும் தேவை.

தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதி என்ற பெயரில் போராட்டத்திற்கான நிதிதிரட்டலை ஆரம்பித்துள்ளோம். இந்த நிதிக்கு வாரிவழங்கி தேசத்தின் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்வோம்.

இந்த வகையில்

**குருதிக்கொடை உயிர்களைக் காப்பாற்றும்;**
**பணக்கொடை ஒரு தேசத்தைப் பாதுகாக்கும்!**

**" புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் "**

தமிழீழ விடுதலைப் புலிகள்

www.eelamview.com

# சாலப்பொருந்தும் சட்டம் வந்தாச்சு
# " ஏலவிற்பனை " இனியிங்கில்லை!

# உலைக்களம்

வியாசன்

மின்னாமல் ஒரு ஆனந்தப் பேரிடி
எம்மண்ணில் இறங்கியது.
நிலம் கிழித்தோர் நீரூற்று
குபுகுபுவென்று கொப்பளித்துப்
பூமியை நனைத்துப் போகிறது.
எந்த ஆரவாரமுமற்று
அக்கினிக் குஞ்சுக்கு அடைவைத்து விட்டோம்.
நாளை பொரிக்கும்.
பொல்லாப் பிழையைப் பொசுக்கும்.
பெரியமலையைப் புரட்டுவதற்காக......
அடிவ ரத்தில் அலவாங்கு குதிவிட்டோம்.
நாளை மலை சரிந்து போக
சமநிலையிங்கு தர்மமாகும்.
உள்ளே கொதிக்கும் உலைக்களங்கள்
இனி ஆறி அடங்கும்.
சுடுமூச்சாகிச் சுவரிடிக்கும் பெருமூச்சுகளின்
அவர்கள்விடும் அக்கினி மூச்சின் அர்த்தம்
எத்தனை பேரைத் தைத்தது?
" மணக்கொடைத் தடைச்சட்டம் "
இது புரையோடிப்போன புண்ணுக்கு
தலைவன் செய்த சத்திர சிகிச்சை.
அதர்மத்தின் அடிமுடியை நீறாக்க
பிரபாகரன் இட்ட பெருநெருப்பு.
போகப்பொருளாகவும், காயப்பொருளாகவும்
பெண்ணை எதிர்கொள்ளும் புன்மைதிருமட்டும்
பேச்சளவில் மட்டுமே பெண்விடுதலை.
ஆணாதிக்கத்தின் வேர்கள்
ஐந்து கண்டங்களையும்,
ஏழு கடல்களையும் கடந்து
எங்கும் நிறைந்துள்ளது.
அது ஆவரங்காலிலும் உண்டு
அமெரிக்காவிலும் உண்டு




சோகமினித் தொலைந்து போகும்.
மலரில் மதுவருந்தி மயங்குவதற்காக
வண்டுகளுக்குப் பூக்கள்
வரதட்சணை கொடுப்பதில்லை,
காளை மாட்டுக்கு கலியாணச்சீர் கொடுக்கும்
பழக்கமேதும் பசுமாட்டுக்கில்லை,
ஆண்நாய் பெண்நாயிடம்
ஆறுலட்சம் கேட்பதில்லை.
மானிடனுக்கு மட்டும் ஏனிந்த இழிநிலை
அதுவும் தமிழனென்றால் ...
பிள்ளையை விற்பதில் அவனே பெரியபுள்ளி.
மதங்களேதும்
மணக்கொடையை ஆதரிக்கவில்லை.
தெய்வங்களெவரும்
சீதனம் வாங்கியதாகத் தெரியவில்லை.
பார்வதிக்குப் பாதியுடல் கொடுத்து
பரமசிவன் அர்த்த நாரீஸ்வரரானார்.
சரஸ்வதியை நாக்கிலே தூக்கிவைத்து
பிரம்மா பெரிய கடவுளானார்.
உள்ளே சென்று உற்றுப்பார்த்தால்
ஆண்டவன் சந்நிதானங்கள் அனைத்திலும்
ஆணும், பெண்ணும் அரையரைவாசியே.
பெண்ணைச் சக்தியென்றார் பாரதியார்,
பெரும் சக்தியென்றார் விவேகானந்தர்.
தாய்மையின் வடிவமென்றார் பரமஹம்சர்
இவையொன்றும் காதல் வாழ்வுக்குக்
கைகொடுக்க மாட்டாது என்றாலும்,
பெண்ணே பெரியவள்,
மாதா; சக்தி,
மனைவி; பெரும்பொருள்
மகள்; பிரமிப்பின் பேரொளி.
காதற்குளிப்பில் உடலாறும் போதுதான்
மனிதன் 'ஞானி' ஆகின்றான்.
அந்தக் குளியலுக்கு எவனும் காசுவாங்கினால்
அவன் 'பாவி' ஆகின்றான்.
பத்துலட்சம் காசும்,
பன்னிரண்டு பரப்புக் காணியும்
நாற்பது பவுணில் நகையும் வாங்கி
ஏலத்தில் தன்னைக் கூவிவிற்றவன்
எந்தமுகத்தோடு முதலிரவுக்கு கதவுமூடுவான்?
காசுக்கு தன்னை விற்றவன் வீட்டில்
மகிழ்ச்சியாகக் கட்டிலும் ஆடாது.
மனநிறைவோடு தொட்டிலும் ஆடாது.
மீசை முளைத்ததொன்றை வாங்கும் வழியற்று
இரவில் நட்சத்திரங்களை எரித்தபடி
எடுத்ததெற்கெல்லாம் எரிந்து விழுந்தபடி
நரையெறிந்து,
நடைதளர்ந்து,
கோடை மரமாகி இலையுதிர்ந்து போகும்
முதிர்கன்னியரின் வாசல் கடந்து
கலியாண ஊர்வலம் போகும் போது
யன்னல் கம்பிகளில் முகம் உரசி
தீ மூட்டியபடி
விகிதாசாரத்தில் கொஞ்சம் வேறுபாடு
அவ்வளவே.
பெண்ணாகப்பட்டவள்
பானைகழுவி, படுக்கை தட்டிப்போடும்
கண்திறந்து மூடும் யந்திரமல்ல
பேசாப் பொருளாகி ஏவலியற்றும்
' றிமோட்கொன்றோல் ' பொம்மையுமல்ல
ஆணைப்போல் அவளுக்கும்
சரியாசனம் வேண்டும்.
அரியாசனமும் வேண்டும்.
கண்ணகியை உதறிவிட்ட கோவலன்
இன்னொருத்தியுடன் போனான்.
' மாசாத்துவான் 'மகனுக்கு
மடிவற்றிப் போனதும்
காற்சிலம்பு கேட்டு
அவள் காலடிக்குத் திரும்பினான்.
பொருளுக்கும், போகத்துக்குமா
பெண்ஜென்மம்?
நிலவுடமைக் காலத்தில்
பெண்ணுக்கு நீதிகிட்டவில்லை
பொருளுடமைச் சமூகத்திலும்
அவள் பெருமையடையவில்லை,
இன்று வரையும்தான்
அவளின் இடர்தீரவில்லை.
" சீனத்து மாநாட்டுத் தீர்மானம் "
என்ன செய்யும்?
ஒருபாட்டம் அழுதுவிட்டு ஓய்ந்து போகும்.
இன்று கண்திறந்தது எங்கள்மண்.
போராட்டம் பெண்ணுக்குப்
புதுவாழ்வு தந்தது.
குச்சொழுங்கையெங்கும் பெண்ணின்குரல்
குதூகலிக்கின்றது.
பேரிகையொலிக்கப் பெண்மை நிமிர்ந்து
சூரியனைத் தொட்டு நிற்கிறது.
அவளின் விழிநீர்துடைக்க ஆயிரம் கரங்கள்.
ஊரதிர நிமிர்ந்த வாழ்வு.
பாரதி சொன்ன
" திமிர்ந்த ஞானச் செருக்கு".
" வாடகைக் கனவுகள் "
அற்ற வல்லமைவடிவாய்
பாடுகின்றாள் விடுதலைப்பண்.
எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிக்குள்ளும்
இடரழித்து விட்ட இறுமாப்பு.
ஆகாயம் வந்து அடிபணியும் அதிசயம்.
" மணக்கொடைத் தடைச்சட்டம் "
புதியபாய்ச்சல்
விற்பனைப்பொருளாய் வீட்டில் முடங்கிய
அற்புதங்களே எழுவீர்!
சாலப் பொருந்தும் சட்டம் வந்தாச்சு
ஏலவிற்பனை இனியிங்கில்லை. ○

## மாட்சிக்குப் பலி எங்கள் மாசறியாக் குஞ்சுகளா?

சண்டாளி சதிகாரி
சந்திரிகா பேய்க்காளி
கொண்டவனை, அப்பனை
கொலைக்குக் கொடுத்தவளே!

ஆட்சிக்கொலு அமர்ந்த
அரக்கியே உன்னுடைய
மாட்சிக்குப் பலி எங்கள்
மாசறியாக் குஞ்சுகளா?

பிஞ்சுகளைப் பிய்த்தெறியும்
பிடாரியே பிசாசே
எஞ்சியுள்ள பரம்பரைக்கும்
ஏன் பழியை தேடுகிறாய்?

பள்ளிச் சிறுவரென்ன
பயங்கரவாதிகளா?
துள்ளிவிளையாடி
துரத்திப்பிடித்தவரை
கொள்ளிக்கும் உடலின்றி
குலைத்தாயே குடிகேடி

துண்டாடி எம் சிறாரை
துவசம் செய்பவளே
மண்டை ஓட்டு மகாராணி - உனக்கு
ரெண்டுண்டு எண்ணிப்பார்.

'குடி'யாட்சி நீ நடாத்த
குடும்பமாய் அழிப்பவளே

அடிபெயர்ந்து விழுமுந்தன்
அரசு விரைவினிலே!

புத்தமதத் தத்துவத்தை
தத்தெடுத்த உத்தமரே?
சத்தியத்தை சவக்குழிக்கு
சமர்ப்பணம் செய்தவரே
யுத்தமுனை சென்று
ரத்தப்பலியெடுக்க - எம்
வித்துகளை அழிக்க
விடையளிக்கும் விசர்களே!

உத்தமன் புத்தபிரான்
உம்முன்னால் இன்றுவரின்
' உம்ப மரணுவா" தான்
உங்கள் பதிலாயிருக்கும்


இத்தனைக்கும் பின் தெற்கில்
இலைநக்கும் துரோகிகளே!
பெற்றவளை விற்றுப்
பிழைப்பதிலும் பெருமையுண்டோ?
- உமக்கு

கச்சைகூட வேண்டாம்
கையினிலே ஓடெடுத்து
பிச்சை பெற்று உண்ணும்
பெருமை அதில் உண்டே!



– நாவண்ணன்

# கைகளிற்குள் வீழ்கிறது களம்!



இழுத்துச் செல்லப்படுவது எரியும் 'டோறா' மட்டுமல்ல: சிங்களக் கடற்படையின் திமிரும்தான்!

ஓகஸ்ற் மாதம் 29 ஆம் நாளின்முன்னிரவில். முல்லைத்தீவுக் கடலில், புலிகள் சுற்றிவளைத்தது கப்டன் லொயோலா பெர்னாண்டோவின் தலைமையிலான ஐரிஷ் மோனா என்ற கப்பலை அல்ல; உண்மையில் -

சிங்களப் படைத்துறையின் மானத்தையும், மனவுறுதியையும், '' இராணுவத் தீர்வையே'' வழங்கமுனைந்த சந்திரிகா அரசின் தலைக்கனத்தையும், இறுமாப்பையுமே ஆகும்.

சிங்களப் படைக்கு ஒரு துணைப்படையாக உதவும் டக்ளஸ் தேவானந்தா கும்பலின் பாவனையிலிருந்த, 'ஐரிஷ் மோனா' கப்பலை நாம் வழிமறித்தது - சிங்களக் கடற்படையை சண்டைக்குள் இழுக்கும் ஒரு போரியல் நோக்கத்திற்காகவேதான்.

அது- யாழ் குடாப் போர் அரங்கில் நிலைகொண்டிருக்கும் துருப்புக்களுக்கான, தனி ஒரு வழங்கற் பாதையான கடல்வழியைச் சேதத்திற்கு உள்ளாக்கும் திட்டத்தின் ஒரு அங்கம்.

இருப்பினும் - அதற்காகப் ''புலிகள் பொது மக்களை இரையாகப் பயன்படுத்தினர்'' என எவரும் கருதினால், அது தவறானதாகும்; கப்பலை மட்டுமே நாம் அவ்வாறுபயன்படுத்தினோம். கையகப்படுத்தியஉடனேயே, 'ஐரிஸ் மோனா' விலிருந்த அனைவரையும் பாதுகாப்பான தூரத்திற்கு அகற்றிவிட்டு வெறும் கப்பல்தான் வெற்றியின் தூண்டிலாகக் கடலில் நிறுத்தப்பட்டது.

எதிர்பாராதவிதமாக - பயணிகள் கப்பலிற்குள் இருக்கும்போதே சண்டை மூண்டிருந்தால்கூட, மக்களுக்குத் தீங்கு விளையாதவாறு சண்டையை வெல்லும் முன்னெச்சரிக்கை வழிமுறைகளையும் கடற்புலிகள் கைவசம் கொண்டிருந்தனர்.

அதிகாலை 5. 30 மணிக்குள் காரைநகரை வந்தடைய வேண்டிய கப்பல் வந்து சேரவில்லையே என்றோ, புறப்பட்ட கப்பல் போய்ச் சேர்ந்ததா என்றோ எந்தக் கவலையும் படாமலிருந்த படையினர், முதலில் -

'' முல்லைத்தீவில் மர்மக் கப்பல் ஒன்று தரித்திருக்கின்றது'' எனக் கிடைத்த ஒரு தகவலை, '' புலிகளின் கப்பல் ஆயுதங்களை இறக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றது '' என நம்பினர்.

சிங்கள முப்படைகளினதும் கூட்டு நடவடிக்கைகளுக்கான தளபதி, மேஜர் ஜெனரல் றொகான் தளுவத்தையின் பணிப்பிற்கிணங்க, கிழக்குக் கடற்பிராந்தியத் தளபதி கொமடோர் தயா சந்தகிரி - ' P. 458 ' இலக்க ' டோறா ', ' P. 463 ' இலக்க ' சுப்ப டோறா ' ஆகிய அதிவேகத் தாக்குதற் படகுகளை கடற்படையின் பாரிய போர்க் கலமான ' ஜெயசாகரா ' என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலின் தலைமையின் கீழ், களத்தில் இறக்கினார்.

புலிகளின் நோக்கம் நிறைவேறியது.

அது ஓகஸ்ற் 29 ஆம் நாளின் மதியப் பொழுது.

குறிப்பிட்ட ஒரு கடற்பகுதியில், தான் கப்பலொன்றைக் கண்டுள்ளதாகவும் அதனை நெருங்கி தனது படகைச் செலுத்துவதாகவும், 'சுப்ப டோறா' வின் கட்டளை அதிகாரியான லெப்ரினன்ற் நளின் விஜயசிங்க ' ஜெயசாகரா' வுக்கும் மற்றைய ' டோறா ' வுக்கும் அறிவிக்கின்றார்.

உடனடியாக அவையிரண்டும், ' சுப்ப டோறா ' வுக்குத் துணை சேர்வதற்காக அப்பகுதியை நோக்கி விரைய - ' ஜெயசாகரா ' விலிருந்து மின்னிய செய்தி, கிழக்குப் பிராந்திய கட்டளைப் பணியகத்தை உசுப்பி விடுகின்றது.

திருக்கோணமலையிலும், காரைநகரிலும், வடக்குக் கிழக்கு கடற்பரப்பிலும் ஏற்கெனவே பலதடவை கண்டிருந்ததனால், 'ஐரிஷ் மோனா' வைப் படையினர் சுலபமாக இனங்கண்டனர். அத்தோடு கப்பலின் பின்புறத்திலும் முன்புறத்திலும் பெரிய எழுத்துக்களில் இருந்த ' IRISH MONA ' என்ற பெயரையும், அவர்கள் கவனித்தனர்.

எனினும் -

புலிகளால் அது வழிமறித்து நிறுத்தப்பட்டுள்ளது என்பதை ஊகிக்கத் தவறினர்: அதுதான் கடற்புலிகளுக்குக் கிடைதத அரிய வாய்ப்பு-

' சுப்ப டோறா ' போதிய அளவு தூரத்திற்குள் அண்மித்து விட்டது; தாக்குதல் வலயத்திற்குள் உட்பட்டுவிட்டது; கடற்புலிகள் விரித்திருந்த வியூகவலைக்குள் அது சிககிவிட்டது!

இதுதான் தருணம்! அமைவாகப் பொருந்தியது காத்திருந்த சுபநேரம்! குறி தவறாத குறி வைப்பு! இதோ எகிறிய அடி! பேரோசையோடு கேட்ட வெடியதிர்வோடு தீச் சுவாலை பிரகாசித்தது!

கண்ணிமைப் பொழுதிற்குள் கடலை நிறைத்த கடற்புலிகளின் போரூர்திகள், புகைந்துகொண்டிருந்த ' டோறா ' வை வளைத்துத் தாக்கின. விரைந்து நெருங்கிய வேகத் தாக்குதல் அதன் சுடுதிறனை முறியடிக்க, ' டோறா ' அடிபணிந்தது. சற்று நேரத்தின் பின்னர் -

பூநகரியில் தாங்கள் பறிகொடுத்த நீருந்து விசைப்படகு ஒன்று. ' சுப்ப டோறா ' வைக் கட்டி இழுத்துக் கரைக்குக் கொண்டுபோவதை செய்வதறியாத நிர்க்கதி நிலையோடு - ' ஜெயசாகரா ' வும் மற்றைய 'டோறா' வும் தூரத்தில் இருந்தபடி பார்த்துக்கொண்டிருந்தன.


திருக்கோணமலையில் அபாய மணி அடிக்கப்பட்டது. கொழும்பிலிருந்த கடற்படையின் கட்டளைப் பீடத்திற்கும் 'டோறா' வை இழந்த செய்தி விரைந்தது: ' ஐரிஷ் மோனா 'வின் நிலைமையும் விளக்கப்பட்டது. ' டோறா ' எவ்விதமாக தாக்கப்பட்டது என்ற கேள்விக்கு, ' ஜெயசாகரா' வின் கட்டளை அதிகாரியான கொமடோர் திஸ்ஸ குணதிலகவினால் தெளிவான பதிலளிக்க முடியவில்லை. குழப்பமான தகவல்களைக் கொடுத்த அவர், ''ஆனால் அது ஒரு கரும்புலித் தாக்குதலால் அல்ல'' என்பதை உறுதிப்படுத்தினார்.

ஒரு கடற் கண்ணிவெடி என்பதை விடவும், தரையிலிருந்து ஏவப்பட்ட ஒரு ஏவுகணை, அல்லது கடலிலிருந்து ஏவப்பட்ட ஒரு ஏவுகணை ' டோறா ' வைத் தாக்கியிருக்கக்கூடும் என்பதற்குத்தான் கூடுதலான சாத்தியப் பாடுகள் இருப்பதாக - ' ஜெயசாகரா ' விலிருந்து கிடைத்த தகவல்களை வைத்து - கடற்படைக் கட்டளைப் பணியகம் ஊகித்தது. உண்மையில் அப்படித்தான் நிகழ்ந்திருக்குமானால், அது ஒரு புதிய பூதாகரமான - பிரச்சினையேதான். கடலில் தோன்றியுள்ள சிக்கலான களநிலைமை, அவர்களைத் தடுமாறவைத்தது; அடுத்து என்ன செய்வதென்ற தீர்மானத்திற்கு அவர்களால் வரமுடியவில்லை.

அதேசமயம் - தாங்கள் தனித்து நிற்பது ஆபத்தானது என்பதோடு, உடனடியாக உதவிகள் அனுப்பப்படாதவிடத்து, தாம் அங்கு தொடர்ந்தும் நிலைகொண்டிருக்க முடியாது என - ' ஜெயசாகரா ' வும் மற்றைய 'டோறா' வும் அபயக்குரல் எழுப்பத் தொடங்கின அத்தோடு, மேற்கொண்டு ஏதாவது செய்வதற்காகவும் படைகளை அனுப்ப வேண்டிய தேவையும் இருந்தது. சிங்களப் படைத்துறைத் தலைமைக்குத் தலை சுற்றியது; திரிசங்கு நிலையில் அது திகைத்தது.

மேஜர் ஜெனரல் றொஹான் தளுவத்த, தன்னால் ஆற்றக் கூடிய உடனடிக் காரியமாக, வான்படையைக் களத்திற்கு அனுப்பினார்.

'பெல் 212' உலங்கு வானூர்திகள் - சுட்டு வீழ்த்தப்படலாம் என்ற அச்சத்தில் - 'டோறா' தாக்கப்பட்ட இடத்திற்குத் தொலைவில் 'கடலிற்குக் காற்று வீசிக்கொண்டிருந்தன!' சீனன்குடா தளத்திலிருந்து புறப்பட்டு வந்த 'F. 7 சுப்பசொனிக்' விமானங்கள் கண்ணுக்கெட்டாத விண்ணுக்குள் மறைந்து, மண்ணில் குண்டுவீசிக் கொண்டிருந்தன! அதே சம நேரத்தில் -




**கப்டன் செவ்வானம்**
(கிருஷ்ணபிள்ளை சுமதி)
மூளாய் தெற்கு,
யாழ்ப்பாணம்.


www.eelamview.com



**கப்டன் அருள்ஜோதி**
(முத்துலிங்கம் சியாமளா)
காரைநகர்,
யாழ்ப்பாணம்.



**மேஜர் நகுலன் / சோமன்**
(கந்தையா கிருஷ்ணதாஸ் - கிருஷ்ணா)
களபூமி, காரைநகர்.
யாழ்ப்பாணம்.



**மேஜர் கண்ணாளன்**
(விநாயகம் இளையதம்பி)
மட்டக்களப்பு.

சீனத் தயாரிப்பான 'ரணசுறு', 'சூரயா' வகையைச் சேர்ந்த இரண்டு 'சங்காய்' ரகப் பீரங்கிக் கப்பல்களோடு, மூன்று சுப்ப 'டோறா'க்களையும், திருக்கோணமலையிலிருந்து 60 கிலோ மீற்றர் தொலைவிலிருந்த போர்முனைக்கு அவர் அனுப்பிவைத்தார்.

பொழுது மங்குவதற்கு முன்னதாக, சண்டை முனையை அடைந்துவிட்ட அந்த அணிக்கு, உடனடியாக ஏதாவது ஒரு காரியத்தில் இறங்க வேண்டியது அவசியமானதாக இருந்தது.

ஆகக் குறைந்தது - இழந்துபோன 'டோறா'விலிருந்த லெப்ரினன்ற் நளின் விஜயசிங்க, சப் லெப்ரினன்ற் குமாரதுங்க உட்பட 9 துருப்புக்களின் நிலையைத் தன்னும் ஏதென்று அறிய வேண்டிய கடமையை அவர்கள் கொண்டிருந்தனர்.

தாக்குதலில் இறங்குவது ஆபத்தானது என்பதை அவர்கள் விளங்கியபோதும், கிழக்குப் பிராந்திய கட்டளைப் பணியகத்திலிருந்து 'உடனடியாகச் செயலில் இறங்குமாறு' விடுக்கப்பட்ட உத்தரவுக்கு, கீழ்ப்படிந்தே ஆகவேண்டும்.

அப்போது மணி - மாலை 5.30

கடலை வளைத்து 'ஐரிஷ் மோனா'வை அண்மிக்க அவர்கள் எத்தனிக்க - கடல் களமானது; கடுமையான சண்டை ஆரம்பித்தது. விரைந்து தாக்கிய புலிகளின் படகுகளை நெருங்கித்தாக்க சிங்களப் பகைவன் பின்னடித்தான். கரும்புலிகள் பற்றிய அவர்களது அச்சத்தை மெய்ப்பிப்பது போல, வெடிகுண்டு விசையூர்திகள் 'டோறா'க்களை விரட்டின. கரும்புலிகளுக்குத் தற்காத்து, கடற்புலிகளோடு சண்டையிடவேண்டிய தர்மசங்கடத்தை அவர்கள் சந்தித்தனர். உக்கிர மோதலின் நடுவே -

சண்டை தொடங்கிய சில நிமிடங்களின் பின் -

படையினரின் கண்ணெதிரிலேயே, 'P. 456' இலக்க 'டோறா'ப் படகு தீச்சுவாலையோடு வெடித்துச் சிதறியது!

தடுக்க முடியாத ஆற்றாமையோடு - கையாலாகாதவர்களாக - அவர்கள் பார்த்துக்கொண்டிருந்த போதே மூழ்கிக்கொண்டிருந்த 'டோறா'விலிருந்து கடற்புலிகள் ஆயுதங்களையும், ஏனையவற்றையும் அப்புறப்படுத்தி முடித்தனர்.

இருள் சூழ்ந்துவிட்டது. தங்களது தாக்குதற் படகுகள் எவ்விதமாகத் தாக்கப்பட்டன என்பதைப் புரிந்துகொள்ள முடியாத அதிர்ச்சியோடும் அச்சத்தோடும். ஏனைய கடற் படைக் கலங்கள், பாதுகாப்பான தூரத்தை நாடிப் பின்வாங்கின.

இரண்டாவதாகத் தாக்கப்பட்ட 'டோறா'விலிருந்த லெப்ரினன்ற் ஹேமந்த விஜயவர்த்தனா, லெப்ரினன்ற் ஹெரத் உட்பட தமது 7 சகாக்களையும் பற்றிய கேள்விக்குறியோடு - பல மைல் தொலைவில் தரித்து நின்று - ஏனைய கப்பல்கள் இரவு முழுவதும் விழித்திருந்தன.

• • •

பண்டாரவன்னியனின் பொற்கால்கள் களையாற நடந்த ஒரு கரையோரம்.

கடல் தரையோடு கைகோக்கும் ஒரு நெய்தற் கிராமம்.

செப்ரெம்பர் 3ஆம் நாளின் கருக்கல் பொழுது -

நிலவற்ற வான்; எதுவும் மின்னுதலற்ற 'றாடார்' திரை.

அலைகடல் கடந்து அரசாட்சி படர்ந்த சோழப் பேரரசனின் கொள்ளுப் பேரர்கள் - நீல வரிப் படகுகளை நீருக்குள் இறக்கினர்.

சுடுநீர்ச் சுரப்பிகளை முடியில் தரித்து - தேசத்திற்கு மகிமையளிக்கும் தலைநகர் கடந்து -

மீன் பாடுகின்ற ஒரு கரையோரக் கிராமத்தில் தரையேறும் பயணம்.

கண்ணாளனின் தோள்களில் தட்டி நகுலன் சிரித்தான்.

அணி புறப்பட்டது; அலை வழிவிட்டது; பயணம் விரைவுபட்டது.

ஆழியில் கவிந்திருந்த காரிருள் பிரித்து புலிகளின் படகணி விரைந்து கொண்டிருக்க -

9.30 மணியை நேரம் கடந்து கொண்டிருக்க -

குச்சவெளியை அணி நெருங்கிக்கொண்டிருக்க -

எதிர்ப்பட்டன 'டோறா'க்கள்; தடைப்பட்டது பயணம்; இயக்கப்பட்டன துவக்குகள்.

கடுஞ்சண்டை! சன்னங்கள் செய்த வர்ண ஜாலம்! இருள் வானில் கிழித்தன ஒளிக்கோடுகள்.

ஐந்து நாட்களுக்கு முன்னர் -

முல்லைத்தீவு 'ஐரிஷ் மோனா'ப் பிசகில் -


இரண்டு 'டோறா'க்களை இழந்த கணக்கை முடிக்கும் அவாவில் விரைந்து தாக்கினான் பகைவன்.

எதிர்த்து நின்று விடாமல் மோதிய புலிகளின் படகுகள், திடீரெனத் திரும்பயோடத் தொடங்கிவிட! - பகைவன் பூரித்துப் போனான்; தலைகால் புரியாத மகிழ்வில அவன் தன்னிலை மறந்தான்!

(11ஆம் பக்கம் பார்க்க)



**கப்டன் சிவா**
(கிருஷ்ணபிள்ளை மோகனதாஸ்)
மண்டைதீவு,
யாழ்ப்பாணம்.



**மேஜர் கீர்த்தி**
(வல்லிபுரம் நகுலேஸ்வரன்)
புலோப்பளை,
யாழ்ப்பாணம்.



**மேஜர் அன்பு**
(இராமசாமி ராஜ்பவான்)
சக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

www.eelamview.com

# மேற்குலகின் கருத்தியலில் சிறு மாற்றம்:

# புலிகளுக்கு மக்கள் வழங்கும் பேராதரவே காரணம்!

மூன்றாம் ஈழப்போரின் ஆரம்பமே பல சாதனைகளைப் படைத்துவிட்டது இதில் பிரதான சாதனையாக, எமது மக்களின் மன அரங்கில் நிகழ்ந்துவரும் சிந்தனை' மாற்றத்தைக் குறிப்பிடலாம். உலகெங்கும் வாழும் தமிழர்களையும் பற்றிக்கொண்டுள்ள இந்த மனப்புரட்சி, எதிர்காலத்தில் மாபெரும் வெற்றிகளைத் தமிழினத்திற்குப் பெற்றுக்கொடுக்கப் போகின்றது.

போர்க்களங்களில் புலிகள் பெறும் இராணுவ வெற்றிகளும், ஆட்சியியலில் புலிகள் இயக்கம் வெளிப்படுத்திவரும் ஆளுமைகளும், சமூக அரங்கில் புலிகள் நடைமுறைபபடுத்திவரும் முன்னுதாரணங்களு - சமூகசீர்திருத்தங்களும் ஒன்றிணைந்து, அந்த மனப்புரட்சியைத் தமிழ் மக்களிடம ஏற்படுத்திவருகின்றன. இந்த மனப்புரட்சியின் உடனடி இலக்கு தனியரசுதான் என்பதில், எந்தவித சந்தேகமும் இல்லை. தமிழீழம் என்ற தனிநாட்டை புலிகள் மிகவிரைவில் அமைத்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை, இன்று உலகெங்கும வாழும் தமிழர்களிடம் உறுதியாக ஏற்பட்டுவிட்டது. எனவேதான், தாம் வாழும் நாடுகளில் எல்லாம் ஒன்றுதிரண்டு- வீதிக்குவந்து - தமது மனப்போக்கை வெளிப்படுத்தி வருகின்றனர்.


சுவிற்சர்லாந்து தேசத்தின் ஜெனீவா நகரில் அண்மையில் நடந்த மாபெரும் போராட்ட ஆதரவுப் பேரணி, உலகின் கவனத்தையும் ஈர்த்துவிட்டது. கூட்டத்தில் திரண்ட மக்கள் தொகையும் கூட்ட ஏற்பாடுகளும் - கூட்டத்திற்குச் சுவிஸ் தொடர்பு சாதனங்கள் கொடுத்த முக்கியத்துவமும். சிங்கள அரசுக்கு எரிச்சலூட்டியுள்ளன. வெளிநாடுகளில் உள்ள புலிகளின் அலுவலகங்களை மூடிவிடுவது பற்றிய கற்பனையில் திளைத்திருந்த சிங்கள அரசுக்கு, ஜெனீவா பொலிசாரும் சுவிஸ் அரசுப் பிரதிநிதிகளும் இந்தப் போராட்ட ஆதரவுக் கூட்டம் தொடர்பாகக் காட்டிய அக்கறை திகைப்பைக் கொடுத்துள்ளது. ஒரு புகைவண்டியை வாடகைக்கு அமர்த்திய தமிழர்கள், சூரிச் நகரிலிருந்து ஜெனீவா நோக்கி. புகைவண்டி யாத்திரை ஒன்றை நடாத்தினர். 15 பெட்டிகளைக் கொண்டிருந்த இந்த புகைவண்டி, 2500 தமிழர்களை ஏற்றிக்கொண்டு. புலிகள் இயக்க இலட்சினைகளைத் தாங்கியவாறு பயணம்செய்த காட்சி, புலிகளை தடைசெய்யவேண்டும் என்று விரும்பியோரின் முகத்தில் அறைந்தது போல் இருந்திருக்கும்! இத்தகையதொரு மாபெரும் ஊர்வலத்தை, சுவிசில் வாழும் வெளிநாட்டவர்கள் எவருமே இதுவரை நடாத்தியிருக்கவில்லை என்று, ஜெனீவா பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. இதேவேளை, இத்தகையதொரு பேரணிக்கு இதுவரைகாலமும் அனுமதி அளிக்க மறுத்து வந்த ஜெனீவா பொலிசார், தற்போதைய ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கிய செயலின் பின்னால் இருக்கும் ஒருவகை அரசியல் அங்கீகாரத்தையும், குறைத்து மதிப்பிட முடியாது.

இதேபோன்றதொரு போராட்ட ஆதரவுப் பேரணியை, இத்தாலி நாட்டின் சிசிலித்தீவில் வசிக்கும் ஈழத்தமிழர்களும் நடாத்தியுள்ளனர். இந்த ஊர்வலத்தில் 1500இற்கும் மேற்பட்ட மக்கள் பங்குகொண்டிருந்தனர். சிசிலித்தீவின் மேயர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியமையும் குறிப்பிடக்கூடிய அம்சமாகும். அத்துடன் பிலிப்பைன்ஸ், மொறீசியஸ், மொறாக்கோ ஆகிய நாடுகளின் பிரதிநிகளும் இந்தப் போராட்ட ஆதரவுப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றியுள்ளனர்.

இதேபோல, உலகின் பல பாகங்களிலும் இத்தகைய போராட்ட ஆதரவுப் பேரணிகளை ஈழத்தமிழர்கள் நடாத்திவருகின்றனர். புலிகள் இயக்கம்தான் தமிழரின் அரசியல் பிரதிநிதிகள் என்பதைச் சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் என்றும், தலைவர் பிரபாகரன் தான் ஈழத் தமிழர்களின் தேசியத் தலைவன் என்று வலியுறுத்தியும், சிங்களப் படைகளின் அட்டூழியங்களை நிறுத்த வேண்டும் என்றும, இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் கலந்துகொண்ட மக்கள் கோரிக்கைகளை முன்வைத்து - கோஷங்களை எழுப்பினர்.

சந்திரிகா அரசுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக இயங்கிவந்த சர்வதேச ஆதரவு என்ற விடயம் இப்போது பிசுபிசுக்கத் தொடங்கியுள்ளது. 'யுத்தத்தின்மூலம் சமாதானம்' என்ற சந்திரிகா அரசின் கோஷம், சந்திரிகா அம்மையாரின் உண்மை முகத்தை உலக சமூகத்தின் முன் தோலுரித்துக் காட்டியுள்ளது; அத்துடன் சிங்களப் படைகளின் போராயுதங்களால் தமிழ் மக்கள் படும் துயரங்களும் மேற்குலகின் கவனத்தை ஈர்த்துள்ளன. இதேவேளை, போராடும் புலிகளுக்கு, உலகெங்கும் வாழும் தமிழர்கள் தமது ஆதரவைத் தெரிவித்து பகிரங்க கூட்டங்களை - பேரணிகளை நடாத்தியமையும் மேற்குலகின் கருத்தியலில் ஒரு சிறுமாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது எனலாம்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்ற ஐ. நா. அபிவிருத்திச் சபையின் ஆலோசகர் திரு. றோலண்ட் கட்சன் என்பவர், தமிழ் மக்கள் சிங்களப் படைகளால் படும் துயரங்களையும், புலிகளை மக்கள் எவ்விதம் மதிக்கின்றனர் என்ற விபரங்களையும் சர்வதேச நாடுகளிற்கு எடுத்து விளக்கியிருந்தார். திரு. றோலண்ட் கட்சனின் கருத்துக்கள், சர்வதேச இராஜதந்திரிகள் மட்டத்தில் கருத்து மாற்றங்களை ஏற்படுத்த நிச்சயம் உதவியிருக்கும். இதே போல, ஐ. சி. ஆர் சி யுடனான அரசின் தேவையற்ற சச்சரவும் உலக இராஜதந்திரிகள் மத்தியில், சிங்கள ஆட்சியாளர்களின் அடாவடித்தனங்களை அம்பலப் படுத்தி இருக்கும்.




அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தென்னாசியப் பிரதிநிதியான திருமதி ராபெல் அவர்கள், அண்மையில் கொழும்பு வந்திருந்தார். புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பாக பிரகடனப்படுத்த வைக்கவேண்டும் என்ற ஆசையுடனும், உலகெங்குமுள்ள புலிகளின் அலுவலகங்களை மூடச்செய்விக்க வேண்டும் என்ற கற்பனையுடனும், அவரைச் சந்தித்த பேரினவாதப் பத்திரிகையாளர்களுக்கு, அவர் அதிர்ச்சி வைத்தியத்தையே கொடுத்தார். " சிறீலங்கா அரசு புலிகளைத் தடைசெய்தாலும் அதற்காக அமெரிக்காவில் புலிகளைத் தடைசெய்ய மாட்டோம் "; " போராட்டத்திற்கென அமெரிக்காவில் பணம் சேகரிப்பதையும் எமது சட்டம் தடைசெய்யாது "; " புலிகளை பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனப் படுத்தவேண்டிய அவசியமில்லை " போன்ற கருத்துக்குண்டுகளைப் பத்திரிகையாளர்கள் மாநாட்டில் போட்டு, சிங்களப்பேரினவாதிகளை அவர் வாய்மூடச் செய்துள்ளார்.

புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனப் படுத்திவிட்டு, சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் இராணுவ உதவிகளையும் பெற்றுத் தமிழரின் போராட்டத்தை அழிக்கச் சந்திரிகா அரசு கண்ட கனவு, இப்போது கலைந்து கொண்டிருப்பது கண்கூடு. இது எமது போராட்டத்திற்குக் கிடைத்துள்ள பாரிய வெற்றி என்பதிலும் ஐயமில்லை! O

# குடியேறிகள் மத்தியில் பீதி:

# குடியேற்றவாசிகள் அகதிகளாகின்றனர்!

புலிகள் இயக்கத்தின் இராணுவ வளர்ச்சியை சந்திரிகா அரசும் அதன் படைகளும் உணர்ந்தார்களோ இல்லையோ! தமிழர் நிலத்தில் அத்துமீறிக் குடியேற்றப் பட்டுள்ள சிங்களவர்கள் உணர்ந்து கொண்டுவிட்டனர். "மணலாற்றில் புலிகளுக்கு தோல்வி" என அரசும - படைத் தளபதிகளும் - பத்திரிகைகளும் பிரச்சாரம் செய்தனர். ஆனால், மணலாற்று நிலப்பரப்பில் குடியேற்றப்பட்டுள்ள சிங்களவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை; அவர்களில் பலர் மணலாற்றை விட்டு இடம் பெயர்ந்து, தத்தம் சொந்த இடங்களுக்குச் சென்றுவிட்டனர். இவர்களை மீளவும மணலாற்றுக்குக் கூட்டிவந்து குடியமர்த்த அரசு எடுத்த முயற்சி வெற்றி பெறவில்லை. இப்போது அவர்கள் "அகதிகளாக" நீர்கொழும்பில் தங்கியுள்ளனர் என. கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன

இதேபோல அண்மைக்காலமாக, மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையோரங்களில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டுவரும் இராணுவத்திற்கெதிரான தாக்குதல்கள், சிங்களக் குடியேற்றங்களைப் பீதிக்குள் ஆழ்த்தி வருகின்றன. இதுகாரணமாக, அங்கிருந்தும் பல்லாயிரக்கணக்கான "அகதிகள்" பொலன்நறுவ மாவட்டத்திற்குச் சென்றுவிட்டனர் என்றும் கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. ஏற்கெனவே - 'இரண்டாம் ஈழப்போர்' காலத்தில் - பொலன்நறுவவில் 5000 சிங்கள அகதிகள் தங்கியிருந்தனர் என்றும். இப்போது அந்தத் தொகை 15,000 ஆக அதிகரித்துவிட்டது என்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அபாயச்சங்கு ஊதியுள்ளனர்.

தமிழரின் தேசிய தனித்துவத்தைச் சிதைப்பதற்காக, தமிழரின் தாயக நிலத்தைக் கபளீகரம் செய்ய வேண்டும் என்பது, டி.எஸ். சேனநாயக்கா காலத்துச் சித்தாந்தமாகும். இந்த இனவாத சித்தாந்தத்திற்கு தமிழர் தாயகத்தின் கணிசமான பகுதி பலியாகிவிட்டது. ஆயினும் தமிழரின் ஆயுதப் போராட்டம் தீவிரமடையத் தொடங்கியதும், 'விவசாயக் குடியேற்றங்கள்' என்ற போர்வையில் நடாத்தப்பட்டுவந்த சிங்களக் குடியேற்றங்கள் தடுக்கப்பட்டன. இருந்தபொழுதிலும் இராணுவ பாதுகாப்புடனான - ஆயுதம் தாங்கிய - குடியேற்றங்கள் தொடர்ந்து கொண்டே வந்தன. ஆயினும். 'இரண்டாம் ஈழப்போர்' சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு அகதி வாழ்வைப் பரிசாகக் கொடுக்கத்தொடங்கியது மூன்றாம் ஈழப்போரின் ஆரம்பமே அந்த அகதி வாழ்வை குடியேற்ற வாசிகள் மத்தியில் அதிகரிக்கச்செய்தது. எதிர்காலத்தில் ஒரு அகதி வெள்ளத்தையே இந்தக் குடியேற்றவாசிகளின இடம்பெயர்வு சிறீலங்காவில் ஏற்படுத்தும வாய்ப்புக்கள் உள்ளன இந்த அகதி வெள்ளம் சிங்கள மக்களிடம் ஏற்படுத்தப்போகும் சமூக அரசியல் பாதிப்புக்களையும் பொருளாதாரப் பிரச்சினைகளையும். பேரினவாதப் புத்தி ஜீவிகள் இப்போது உணர்ந்துள்ளார்கள். இதன் விளைவுகளை தற்போதைய தீர்வுத்திட்டத்திலும் காணக்கூடியதாக உள்ளது.


அதாவது, தமிழரின் நிலத்தில் குடியேற்றப்பட்டுள்ள சிங்களவர்களையும் - அவர்கள் குடியேறிய நிலத்தையும் நிரந்தரமாகவே பாதுகாத்துவிடும் சில சரத்துக்களை இந்தத் தீர்வுத்திட்டத்தில் காணலாம்; அதுதான். எல்லைகளை மீள்வரைவு செய்வது என்ற விடயமாகும். கிழக்கு மாகாணத்திலும் - மணலாற்றுப்பகுதியிலும் சிங்களக் குடியேற்றங்கள் உள்ள இடங்களைச் சிங்கள மாவட்டங்களுடன் இணைப்பதே 'எல்லை மீள்வரைவின்' நோக்கமாகும்.

தமிழர் தாயகம் பங்குபோடப்பட முடியாதது; அதைப் பங்குபோட புலிகள் என்றுமே அனுமதிக்கமாட்டார்கள். தமிழரின் தாயகத்தை ஆக்கிரமித்தவர்கள் - அது சிங்கள இராணுவமாக இருந்தாலும் சரி, அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களாக இருந்தாலும் சரி - வெளியேறித்தான் ஆகவேண்டும்.

பனிப்பாறைகளைப்போல தமிழரின் நிலத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கும் சிங்களக் குடியேற்றங்கள், தமிழரின்படைபலம் என்ற சூரியனைக் கண்டு உருகத்தான் போகின்றன! O

www.eelamview.com

# இலட்சிய ஆசைகள்



ஆசைகள்...

அவை அலாதியானவை.

ஒவ்வொருவரும் சிற்சில ஆசை விதைகளை தமது மனங்களில் நட்டுவைத்து- நீரூற்றிக்கொண்டிருப்பார்கள்.

ஆசைப்படுவது மனித சுபாவம் - இயற்கை உணர்வு.

சாதாரண மனிதர்களும் எதையாவது அடைய ஆசைப்படுவார்கள்; சரித்திர மனிதர்களும் எதைஎதையோ நினைத்து ஆசைப்படுவார்கள்.

பிள்ளைகளின் எதிர்காலம், குடும்பப் பொருளாதாரத்தின் முன்னேற்றம்... இவை, சாதாரண மனிதர்களின் சாதாரண ஆசைகள்.

தேசத்தின் விடுதலையை - அந்த விடுதலை நோக்கிய ஒவ்வொரு வெற்றிப்படிகளை - கண்குளிரக் கண்டுகளித்தல்...
இவை சரித்திர மனிதர்களின்
இலட்சிய ஆசைகள்.

இத்தகைய இலட்சிய ஆசைகள் பலவற்றைத் தலைவர் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

படைத்துறைப் பள்ளியைத் திறந்துவைத்து விட்டு தனது இலட்சிய ஆசைகளில் ஒன்றை தலைவர் இவ்விதம் வெளிப்படுத்தினார்.

"நான் ஒரு கனவு காண்கின்றேன். அந்தக் கனவு நனவாகி, நடைமுறை உண்மையாக வேண்டும் என்பது எனது அவா. எனது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய - இளம் பரம்பரை தோற்றங்கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக அறிவு ஜீவிகளாக, தேசப்பற்றாளர்களாக, போர்க்கலையில் வல்லுநர்களாக, நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக, ஒரு புதிய புரட்சிகர பரம்பரை தோன்றவேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக - நிருவாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும். இது ஒரு பெரிய ஆசை; அலாதியான கனவு. எனினும் நான் முயற்சிக்கின்றேன். முயற்சி ஆக்கம்தரும் என்பதில் எனக்கு ஆழமான நம்பிக்கை உண்டு."

• • •

இப்படித்தான் 15 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் -

அது 1970 களின் பிற்பகுதி -

இரண்டு கைகளினதும் விரல்களது தொகைக்குள் அடக்கப்படக்கூடிய அளவு எண்ணிக்கையான உறுப்பினர்களே, அப்போது இயக்கத்தில் இருந்தனர்; அந்த உறுப்பினர்களுக்கான இராணுவப் பயிற்சிகளையும் தலைவரே வழங்கினார். இயக்கத்தின் தலைவராகவும், அதேவேளை ஒரு பயிற்சி ஆசிரியனாகவும் தலைவர் அவர்கள் செயற்பட்டகாலம் அது.

இருநூறு - முந்நூறு பேர்கொண்ட இன்றைய பயிற்சி முகாம்களையும், ஐந்து - பத்துப்பேர்கொண்ட அன்றைய பயிற்சி முகாங்களையும் உங்களது மனத்திரையில் மாறி மாறி எண்ணிப் பாருங்கள். அது வியப்பாகவும் இருக்கும்; பெருமையாகவும் இருக்கும்.


பயிற்சி கொடுப்பது - பயிற்சி முகாங்களை நடாத்துவது மட்டுமல்ல, அந்த ஐந்து - பத்துப் பேருக்கான இராணுவ சீருடைகளைப் பெறுவதற்கும் அது கடினமானதொருகாலம்:

அன்று ஒரு நாள்...

எதிர்காலத்தில் இயக்கத்தில் ஏற்படவேண்டிய வளர்ச்சிபற்றி திரு. அன்ரன் பாலசிங்கத்திற்கு எடுத்து விளக்கிக்கொண்டிருந்த போது, தலைவர் சொன்னார்...

"அண்ணை!... ஒரு ஐம்பது போராளிகள் சீருடை அணிந்து கொண்டு - ஆயுதங்கள் ஏந்தியபடி - அணிவகுத்து நிற்கும் காட்சியை நான் பார்க்கவேண்டும் என்பதுதான்" எனது இப்போதைய ஆசை, என்றார்.

தலைவர் வெளிப்படுத்திய அந்த ஆசையை - தான் வீரச்சாவடையும்வரை - மூத்த உறுப்பினர் லெப். சீலன் [சாள்ஸ் அன்ரனி] தனது மனதிலேயே சுமந்து திரிந்து பணியாற்றினார். அவர் வீரச்சாவடைவதற்கு சில காலத்திற்கு முன்னர் ஏதோ ஒரு அலுவலாக யாழ் நகரத்திற்குச் செல்லவேண்டி இருந்தது. அந்தக்காலம், யாழ்நகரம் சிங்களப் படைகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள்



இருந்த நேரம். ஒழுங்கை ஒன்றிற்கூடாக துவிச்சக்கரவண்டியில் சென்ற சீலனும் அவருடன் கூடச் சென்ற இன்னொரு தோழரும், நகரத்தின் உள்ளே இருந்த பிரதான வீதியில் போய் ஏறியதும், அங்கே இருந்த ஒவ்வொரு கடைகளுக்கு முன்னாலும் சிங்கள இராணுவத்தினர் நின்றதைக் கண்டனர் - ஆயுதங்களைத் தோளில் போட்டபடி கூட்டங்கூட்டமாக நின்ற படையினரைப் பார்த்துவிட்டு, சீலன் தனது சக தோழரிடம் கூறினார்......

"மச்சான்! இவங்கள் நிற்கிறதைப்போல "எல்லா இடத்திலும் எங்கடை பொடியளும் ஆயுதங்களோட சிரிச்சுக் கதைச்சபடி - கூட்டங்கூட்டமாக நிற்கிறதை, ஒரு முறை கற்பனை செய்துபார்!"

தலைவரின் இலட்சிய ஆசை ஒன்று, தலைவரின் வலது கரமாகச் செயற்பட்ட அந்தத் தளபதியையும் பற்றிக்கொண்டு, அவரை இயக்கியதையும் காணக்கூடியதாக உள்ளது.

தலைவரின் இலட்சிய ஆசையை நிறைவேற்றப் பாடுபட்டதுடன், உயிர்த்தியாகத்திற்கு ஒரு அற்புதமான முன்னுதாரணமாகத் திகழ்ந்த அந்தத் தளபதி இன்று இல்லை; ஆனால், அவரது பெயரிலேயே ஒரு படையணியை உருவாக்கி, அவரது கற்பனையை தலைவர் அவர்கள் நனவாக்கியுள்ளார்.

'50 புலிவீரர்களைச் சீருடையுடன் பார்க்கவேண்டும்' என்ற தலைவரின் ஆசை, அவர் அதை வெளியிட்டு நாலு ஐந்து வருடங்களிலேயே நிறைவேறிவிட்டது. பின்னர், ஐம்பது நூறாகி, நூறு ஆயிரமாகி - இன்று - ஆயிரம் பல்லாயிரமாகப் பெருகிவிட்டது! 'கெரில்லாக் குழு' என்ற பெயர் மாறி, 'உலகிலேயே பலம் வாய்ந்த விடுதலை இயக்கம்' என்ற புகழும் எமது இயக்கத்திற்குக் கிடைத்துவிட்டது!

• • •

அண்மையில் சிங்களப் படைகள் 'முன்னோக்கிப் பாய்ச்சலில்' ஈடுபட்டபோது - அதற்கு எதிராக - தலைவர், 'புலிப்பாய்ச்சலை' நிகழ்த்தினார்.

'50 போராளிகளை வரிசையாக நிற்கவைத்துப் பார்க்கவேண்டும்' என்று ஆசைப்பட்ட தலைவர் அவர்கள், 'புலிப்பாய்ச்சலில்' பங்கு கொள்ளத் தயாராக - கனரக ஆயுதங்களுடனும் வரிப்புலிச் சீருடையுடனும் - ஆண்களும் பெண்களுமாக - ஆயிரக்கணக்கான புலிவீரர்கள், தத்தம் தளபதிகளுடன் அணிவகுத்தபடி, கம்பீரமாக நின்றுகொண்டு உறுதிப் பிரமாணம் எடுத்த காட்சியைப் பார்த்தபடி சொன்னார்......

"இதைப் பார்க்க எனக்கு, உண்மையில் மெய்சிலிர்க்குது!"

• • •

இப்படியான சின்னச் சின்ன இலட்சிய ஆசைகளைப் போலவே, பென்னம் பெரிய கனவுகளும் தலைவரின் மனதில் இருக்கின்றன. இந்த ஆசைகளைப் போலவே, அந்தக் கனவுகளும் ஒரு நாள் நனவாகும்! ○

www.eelamview.com

# மருண்டவன் கண்ணுக்கு புகைவதெல்லாம் 'மிசைல்'!




புலிகளின் விமான எதிர்ப்பு ஆயுதங்களால் - மூன்றாம் ஈழப்போரில் - அடிபட்டு வீழ்ந்தவை மூன்றே மூன்று விமானங்கள் மட்டும்தான். ஆனால் 90 வான்கலங்களையும், 15.000 வீரர்களையும் கொண்ட சிங்கள வான்படையின் போரிடும் உறுதியும் சுட்டுவீழ்த்தப்பட்டுவிட்டதோ என, இராணுவ ஆய்வாளர்கள் கேள்வி எழுப்பும் அளவுக்கு, சிங்கள வான்படையின் நகர்திறன் பாதிக்கப்பட்டுவிட்டது!

சண்டைகள் நடைபெறும் போது, தரைப்படைக்கோ கடற்படைக்கோ துணையாக வான் தாக்குதலில் ஈடுபடும்படி கட்டளைகள் வரும்போது, வான்படை விமானிகள் விமானமோட்ட மறுக்கின்றனர். அல்லது, சென்றுவிட்டு, ''ஏவுகணை வருகின்றது'' என்று சொல்லிக்கொண்டு சண்டைக் களத்திலிருந்து வெற்றிகரமாகத் திரும்பிவிடுகின்றனர். இவை வான்படைச்கு எதிராக சிங்கள இராணுவ ஆய்வாளர்கள் தொடுக்கும் குற்றச்சாட்டுகள் ஆகும்.

மணலாற்றுத் தாக்குதலின்போதும் 'ஐரிஸ் மோனா' கப்பல் விவகாரத்தில் நடந்த கடற்சண்டையின் போதும் வான்படையின் உதவி கேட்கப்பட்டுங்கூட, அது சரியான நேரத்தில் கிடைக்கவில்லை என்றும்; 'ஏனோ தானோ' என்றே வான் தாக்குதலில் ஈடுபட்டன என்றும்; தரைப்படையும் கடற்படையும் தத்தமது அதிருப்திகளைத் தெரிவித்துள்ளன. தாமே வீசிய குண்டுகள் நிலத்தில் வீழ்ந்து வெடித்தபின் எழும் புகையைக் கண்டுவிட்டு, புலிகள் ஏவுகணை ஏவுகின்றார்கள் என்று கூறியபடி சண்டைக் களத்தைவிட்டு விமானிகள் தளம் திரும்புகின்றனர் என, 'ஐலண்ட்' பத்திரிகையில் ஒரு இராணுவ ஆய்வாளர் கண்டன விமர்சனம் செய்துள்ளார்.

விமான எதிர்ப்பு ஆயுதங்கள் தருவிக்கப்பட்டுள்ளன என் அரசு அறிவித்த நிலையில், போர்முனைக்கு விமானமோட்ட ஏன் விமானிகள் பயப்படவேண்டும் என்று சிங்கள மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். அதுபோல, ஏவுகணை எதிர்ப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் ரஷ்யத் தயாரிப்பான 'அன்ரனோவ்' விமானங்கள் ஏன் கடல்வழி பயணம் செய்ய வேண்டும் என்று, தமிழ்மக்கள் ஐயம் தெரிவிக்கின்றனர்!

விமானங்களை அடுத்தடுத்து இழந்ததால் சிங்கள மக்கள் அடைந்த மனச்சோர்வை அகற்றுவதற்காக, ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்கள் தொடர்பாக அரசு செய்த மிகைப்படுத்தப்பட்ட பிரச்சாரம்தான், இரு பகுதியினரின் சந்தேகங்களுக்கும் பிரதான காரணம்.

இதேவேளை, பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இராணுவத்தில் இணைந்து -பின்னர் போரிடுவதற்குப் பயந்து - படையை விட்டோடிய இராணுவத்தினரைப் பிடித்து இராணுவ நீதிமன்றில் நிறுத்த அரசு நடவடிக்கைகளை எடுப்பதுபோல, வான் தாக்குதல்களில் ஈடுபட மறுக்கும் விமானப்படை விமானிகளுக்கு எதிராகவும் நடவடிக்கைகள் எடுக்கலாமே என, அப்பாவிச் சிங்களவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். ஆனால், அரசுக்கு அது இலகுவாக இருக்கமாட்டாது. ஏனெனில், விமானப்படை விமானிகளில் பெரும்பாலானோர் சிங்கள உயர் குழாத்தின் பிள்ளைகளாவார்; இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது என்பது, சிங்கள தேசத்து நீதியைப் பொறுத்தளவில் முடியாதது ஆகும். இந்த உயர்குழாத்தின் பிள்ளைகள் வான்படையில் சேர்ந்தது தமது நாட்டிற்காகப் போரிட அல்ல; பொழுது போக்கிற்காகவும்-வீரதீர விளையாட்டுக்களுடன் கை நிறையச் சம்பளமும் பெறலாம் என்பதற்காகவுமே வான்படையில் இவர்கள் இணைந்துள்ளனர்.

புலிகள் விமான எதிர்ப்பு ஆயுதங்களைப் பெற முன்னர், தமிழ் மக்களது உயிர்களுடனும் உடைமைகளுடனும் விளையாடுவதுதான் இந்தச் சிங்கள உயர்குழாத்து பிள்ளைகளின் வேலையாகவும் - பொழுது போக்காகவும் இருந்தது!

''புகைக்கிற இடத்தில குண்டைப் போடு.''

''முகில் மறையும் வரை பொறுத்திரு.''

''இலக்கு தவறினால் பிரச்சினை இல்லை; அடுத்த குண்டை வீசு''

... என்று அகங்காரத்துடனும் நகைச் சுவையுடனும் சிங்கள விமானிகள் கதைத்த காலமும், குத்திப்பதிந்து இரைச்சலால் தமிழ் மக்களை மிரட்டிய காலமும் இப்போது மலையேறி விட்டன. இப்போது, போர் முனைக்கு விமானமோட்ட மறுப்பவர்களை கட்டுநாயக்காவில் விமானமேற விடாது தடுப்பதில் அரசு அக்கறை காட்டுகின்றது! ○

# ஒரு கொலைப்படை எவ்விதம் பாதுகாக்கப்படுகின்றது...?

கொழும்புவாழ் தமிழர்களின் மனங்களுக்குள் அச்சத்தை அள்ளி இறைத்த 'ஏரிப்பிணங்கள்' விவகாரத்திற்குப் பின்னால் இருந்த சக்திகள் பற்றிய உண்மைகளும் இப்போது, மிதக்கத் தொடங்கியுள்ளன!

மிதந்த பிணங்கள் தமிழர்களுடையதாக இருந்ததால், கொலைகளுக்குக் காரணமாக இருப்பவர்கள் யார் என்ற கேள்விக்கு விடை காண்பதில் சந்திரிகா அரசு அக்கறை காட்டவில்லை. ஆயினும், வெளிநாட்டு இராஜதந்திரிகளின் முகச்சுழிப்புக்களும், மனித உரிமைக் கழகங்களின் கண்டனங்களும் கொடுத்த நெருக்குதல்கள் காரணமாக, சந்திரிகா அரசு, ஒரு விசாரணைக்கு உத்தரவிட்டது.

விசாரணையின் ஆரம்பத்திலேயே, அது எஸ். ரி. எவ். இனது கைங்கரியம் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. இந்த உண்மை எவரையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கவில்லை. எஸ். ரி. எவ். இனது வரலாறே அப்பாவி மக்களது இரத்தத்தால் எழுதப்பட்டது என்பது, பகிரங்க இரகசியம். '' ஜே. வி. பி. சந்தேக நபர்கள் '' என்றபோர்வையில் நிகழ்ந்த பல்லாயிரம் சிங்கள இளைஞர்களின் படுகொலைகளுக்கும், '' புலிகளுக்கு எதிரான போர் '' என்ற முகமூடியுடன் கிழக்கு மாகாணத்தில் நிகழ்ந்து வரும் தமிழ் இன அழிப்பிற்கும் இந்த எஸ். ரி. எவ். தான் பிரதான காரணியாக இருந்தது; இருக்கின்றது.

ஆனால், இந்த ஏரிப்பிண விவகாரம் தொடர்பாக எமது மக்களுக்கு நாம் சுட்டிக்காட்ட விரும்பும் செய்தி எதுவெனில், நடைபெறும் விசாரணைகளில் இருந்து கொலைகாரப் படையான எஸ். ரி. எவ். இனைப் பாதுகாக்கும் வகையில், சிங்கள தேசத்துப் பத்திரிகைகள் வக்காலத்து வாங்குவதைத்தான்.

''ஏரிப்பிண விவகாரம் தொடர்பான தீவிர விசாரணைகளால் எஸ். ரி. எவ். இனது 'உள உறுதி' சிதைக்கப்படக்கூடாது'' என, 08.09.95 ஆம் திகதிய டெயிலி நியூஸ், ஐலண்ட் பத்திரிகைகள் தத்தமது ஆசிரியர் தலையங்கங்களில் வலியுறுத்தி எழுதியுள்ளன. அத்துடன், கிழக்கு மாகாணப் போர்முனையில் இந்தப் படையினரின் வெற்றிகரமான பங்கு பணி பற்றியும் இப்பத்திரிகைகள் புகழ்ந்துள்ளன.

தென்னிலங்கையில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களை அச்சத்தில் ஆழ்த்திய கோரமான - காட்டுமிராண்டித்தனமான - படுகொலைகள் பற்றி விசாரிக்கும்போது, எஸ். ரி. எவ். இன் 'உள உறுதி' சிதைவடையாது பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதன் அர்த்தம் என்ன?

'ஏரிப்பிணங்கள்' என்ற சின்ன விடயத்தைப் பெரிது படுத்தாதீர்கள் என்று அந்தப் பத்திரிகைகள் கூறுகின்றனவா? அல்லது விசாரணை தொடர்ந்தால் எஸ் ரி. எவ். இன் தலைமைப் பீடமே குற்றச்சாட்டுக்கு உள்ளாகும்; அது பின்னர் அரசியல் பெரும் புள்ளிகள் வரை போய்விடும் என்ற பயமா? அல்லது இனிமேல் பேரினவாதிகளின் விருப்பத்திற்கு அமைய தமிழர்களைக் கொன்றுதள்ள எஸ். ரி. எவ். இனர் தயங்குவர் என்ற அச்சமா? அதேவேளை, கொழும்புப் பத்திரிகைகள் புகழ்ந்துள்ளதைப் போல, கிழக்குப் போர்முனையில் எஸ். ரி எவ். இனர் எதைச் சாதித்தனர்? புலிகளைக் கொன்றார்களா? அல்லது அப்பாவித் தமிழர்களைக் கோரமான முறையில் படுகொலை செய்தார்களா?

இதற்கான விடைகளை எமது மக்கள் நன்றாகவே அறிந்துள்ளனர். ஆயினும், எமது மக்களுக்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புவது யாதெனில், சிங்களப் பத்திரிகைகளும் அவற்றின் ஆசிரியர்களான பேரினவாதப் புத்திஜீவிகளும் - தமிழர்களைக் கொன்று தள்ளிய ஒரு கொலைகாரப் படையை எவ்விதம் பாதுகாக்க முனைகின்றார்கள் என்ற கொடூர உண்மையை, மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதே ஆகும்.

இதேவேளை 'உள உறுதி' சிதைக்கப்படக்கூடாது என்று அந்தப் பத்திரிகைகள் குரலெழுப்புகின்றனவே! எஸ். ரி. எவ் இனது 'உள உறுதி' எது? புலிகளுடனான போரில் அவர்கள் காட்டும் வீரமா? இல்லை, அப்படி எந்த ஒரு வீரத்தையும் எஸ். ரி. எவ் போர்முனைகளில் பெரிதாகக் காட்டவில்லை; படுகொலைகளில் தங்களது 'வீரத்தை'க் காட்டியுள்ளார்கள். தமிழர்களை இனப்படுகொலைக்கு உள்ளாக்கவேண்டும் என்ற கொலை வெறிதான் உண்மையில் அதன் 'உள உறுதி' ஆகும்.

உலக சமூகத்தின்பார்வை படக்கூடிய பகுதியாகிய கொழும்பில் தமிழர்களைக் கொன்றது எஸ். ரி. எவ் செய்த பிரதான குற்றம். ஏனெனில் இதைத்தான் கடந்த 10 வருட காலமாக அது கிழக்கு மாகாணத்தில் செய்து வருகின்றது. எஸ். ரி. எவ் இனர் புரியும் சித்திரவதை வடிவங்களும், படுகொலை முறைகளும் கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கு நன்கு தெரியும். கயிற்றாலும், தும்புக்கட்டைகளாலும், விறகுதடிகளாலும் கழுத்தை நெரித்துக் கொல்வது எஸ். ரி. எவ் இன் கிழக்கு மாகாண 'ஸ்ரைல்' கொழும்பின் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஏற்ப, பிளாஸ்ரிக் கைவிலங்கால் கழுத்தை நெரித்துக் கொல்வது எஸ். ரி. எவ் இனரின் கொழும்பு 'ஸ்ரைல்' ஆயினும், தமிழர்களைக் கொன்ற பின் நீர்நிலைகளில போடுவதா அல்லது தெருக்கள் - வயல்வெளிகளில் போடுவதா என்பதைப் புறச்சூழல் தீர்மானிக்கின்றது போலும்!

இதேவேளை, இந்த ஏரிப்பிண விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள எஸ். ரி. எவ். இன் உயர் அதிகாரிகள் சிலரைப் பதவி நீக்கம் செய்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது. 28 தமிழர்களின் கொலைகளுக்குப் பிரதான காரணமான இந்த அதிகாரிகளுக்குத் தண்டனை பதவி நீக்கம் மட்டும்தானா! உண்மையில், இது தண்டனையே அல்ல, இது கொலைஞர்களைப் பாதுகாக்க அரசு எடுத்த நடவடிக்கை ஆகும்!

தமிழ் மக்களுக்கும் இலங்கையின் சட்டத்திற்கும் சிங்கள அரசு 'காக்காய் ' காட்டலாம்; ஆனால், இந்த அரசபயங்கர வாதத்தை உலக சமூகத்திற்கு மறைக்கமுடியாது! ○

www.eelamview.com

# கைகளிற்குள் வீழ்கிறது களம்!

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

உற்சாகம் கரைபுரண்டோட - 'டோறா'க்கள் கலைத்துக்கொண்டோடின.

ஆனால் -

அது ஒரு தந்திரோபாயப் பின்வாங்கல் -

பொறிக்குள் விழ வைக்க புலிகள் செய்த ஒரு யுத்த உத்தி !

மதிநுட்பத்தோடு நகர்த்திய வியூக வளைவு -

உவகை பொங்கியதால், பகைவன் ஊகிக்கத் தவறினான்.

ஆத்திரத்திலும் - ஆனந்தத்திலும் அவன் நிதானமிழந்தான்.

துரத்தித் துரத்தி அடித்தான்.

குச்சவெளியிலிருந்து புல்மோட்டை வரை - இருபது நிமிட நேர மரண ஓட்டம்.

புலிகளின் படகுகளை 'டோரா'க்கள் மிக வேகமாக நெருங்கின; படகுகளை முந்திக் கொண்டு சன்னங்கள் சீறின.

ஆகக் கடைசிப்பதிவு 280 மீற்றர் இடைவெளி.

கடற்புலிகளையே கலைத்தடித்தவர்கள் என்ற பதக்கமொன்றைப் பெற, அந்த 'டோறா'க்களின் கட்டளை அதிகாரிகள் ஆசைப்பட்டிருக்கலாம் -

ஆசை மோசம் செய்துவிட்டது பகைவனுக்கு.

கலைத்தடிப்பதில் கவனமாயிருந்தவன், அக்கம் பக்கத்தை அவதானிக்கத் தவறினான் - அது ஒரு போரியல் தவறு.

சுற்றிவரக் கருமை; கருமையோடு புலிகள்; புலிகளோடு வெடிகள் !

நகுலனும், கண்ணாளனும் அசுரவேகத்தில் அண்மித்தார்கள் - அலையன்னை ஆராதித்தாள்.

ஏமாற்றப்பட்டதால் ஏதுமறியாத பகைவன் எதிர்பார்த்திருக்கவே மாட்டான்.

பக்கவாட்டாக - 'டோறா'வின் பின் மூலையில் விழுந்தது இடி !

'' உயிர்ப் பூ '' -

அதைக் காற்றிலே ஊதினார்கள் கரும்புலிகள்.

புல்மோட்டைக் கடலிலே எழுதினார்கள் வரலாற்றை.

இருளைக் கலைத்த பேரொளியோடு, செவியில் முழங்கியது பேரொலி.

கடலதிர்ந்த அந்தக் கணப்பொழுதிற்குப் பிறகு - 'டோறா'வைக் கடல் விழுங்கத் தொடங்கியது. புலிகளின் 'றாடார்' திரையில் மின்னி மின்னி மறைந்த 'டோறா', மெல்ல மெல்ல இல்லாமலே போய்விட்டது.

ஆனால் -

சந்திரிகா அரசு சங்கதியை மறைத்தது; மூழ்கடித்த சேதியை இருட்டடித்தது. தங்களது தப்பவிட்டதாக தம்பட்டமடித்தது.

ஆயினும்.

மறுநாள் பகல் முழுவதும் உலங்கு வானூர்தி ஒன்று கடலைத் தடவியதே... ஏனாம்!; பதிந்து பதிந்து கண்களால் துழாவியதே .. எதற்காம்; மீன்களை ஊடறுத்து அடிமண்ணில் தேடியதே... எதையாம்?

• • •

மோகன் -

புலிகளின் கடல் வேவு வீரன்.

கடற்புலிகளின் சிறப்பு வேவுப் பிரிவின் பொறுப்பாளன்.

கடல்நீரேரி கடந்து பூநகரிக்கும், கண்டமேடைக் கடல் தாண்டி பண்டைதீவுக்கும், சமுத்திரத்தில் மீனாகி காங்கேசன்துறைக்கும் மட்டுமல்ல -

வெற்றிகளைப் பெற்றெடுத்த பல சமர்களின் வேவுகளுக்காக நீந்தியவன் அவன்.

வருடத்தில் 8760 மணித்தியாலங்கள் என்பது பிழையற்றதெனில் - அதில் 2920 இற்கும் அதிகமான மணித்தியாலங்கள் அவன் உப்பு நீரில்தான் ஊறினான்.

மோகன் வேவுக்காக நீந்திய மிகப் பெரும்பாலான பயணங்களில், ரகுராம்தான் அவனுக்குத் துணை.

'புலிப்பாய்ச்சலின்' கடற் பாய்ச்சலாய் 'எடித்தரா'வுக்குக் குறிவைத்தது. அருள்ஜோதி குண்டு சுமந்த கப்பலுக்கு வழிகாட்டியது வரை அப்படித்தான்.

அந்தக் கடைசி நாள் - 10. 09. 1995.

காங்கேசன்துறைக் கடற்படைத் தளத்தில் -

'டோறா'க்களையும். 'சங்காய்' பீரங்கிக் கப்பல்களையும் தமது பாதுகாப்பின் கவசமாக நிறுத்தி -

போர்க் கருவிகளையும், உணவுப் பொருட்களையும் தரையிறக்கும் பணிக்காக -

ஒரு தரையிறக்கக் கப்பலும், பிறிதொரு விநியோகக் கப்பலும் நிலைகொண்டிருந்தன.

இந்த இரு கப்பல்களுள் வாய்ப்பான ஏதோ ஒன்று அவளுடைய இலக்காக இருந்த போதும் - தரையிறக்கக் கலத்திற்கு முன்னுரிமை கொடுக்குமாறுதான் அருள்ஜோதிக்குச் சொல்லப்பட்டிருந்தது. அவள் 'அங்கயற்கண்ணி நீரடித் தாக்குதற் பிரிவின்' ஒரு கரும்புலி.

மோகன் வழிகாட்டியாகவும், வழி நடத்துபவனாகவும் சென்றான். 'நிலைமை அவதானிப்பாளர்' பணி ரகுராமிற்குக் கொடுக்கப்பட்டிருந்தது. தாக்குதற் திட்டத்தின்படி அருள்ஜோதியைத் தவிர மற்றைய இருவரும் திரும்பிவிட வேண்டியவர்கள்.

கடைசியாக ஒரு நேரத்தில், துறைமுகத்தின் உட்பகுதிக்குள் தாங்கள் ஊடுருவத் தொடங்குவதாக அவர்கள் அறிவித்தனர். ஆனால், அதன் பின்பு எந்தத் தகவலும் அவர்களிடமிருந்து எமக்குக் கிடைக்கவில்லை.

எனினும், அந்தக் கடைசி அறிவிப்பிலிருந்து கணிக்கப்பட்ட நேர இடைவெளியில் - 12 மணி 40 நிமிடத்திற்கு - குறிக்கப்பட்ட இடத்தில் குண்டுத்தாக்குதல் நிகழ்ந்த வெடியோசை, துல்லியமாக அவதானிக்கப்பட்டது.

அதன் பின்பு பெறப்பட்ட - சந்தேகத்திற்கு இடமற்ற உறுதியான தகவல்களை ஆராய்ந்த போது, தரையிறக்கக் கலம் தாக்கப்படாத போதும், குறிப்பிட்ட அந்த விநியோகக் கப்பல், தாக்கி மூழ்கடிக்கப்பட்டதற்கான சாத்தியப்பாடுகள் நூறு வீதமும் தென்படுகின்றன.

இருப்பினும் - எது நடந்தது என்பதை எங்களால் ஆணித்தரமாகச் சொல்லிவிட முடியவில்லை. ஏனெனில் சொல்லவேண்டியவர்கள் இருவராலும் திரும்பிவர முடியவில்லை.

புல்மோட்டைத் தாக்குதலைப் போலவே, இந்தத் தாக்குதலிலும் உண்மையை மூடி மறைத்து, தலைகீழான தகவல்களையே அரசு வெளியிட்டிருக்கின்றது என்ற நம்பிக்கை வலுவாக உள்ளது.

• • •

20. 09. 1995.

சூரியன் மறையாத மாலை வேளை.

5 'டோறா' படகுகளினதும், 1 'சங்காய்' பீரங்கிக் கப்பலினதும் இறுக்கமான பாதுகாப்புடன் -

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து 500 மீற்றர் தொலைவில் தரித்து நின்று -

காலை 7 மணியிலிருந்து பொருட்களை இறக்கிக் கொண்டிருந்த இராணுவ விநியோகக் கப்பலான 'லங்கா முடித' -

அன்றைய கடைசித் தொகுதிப் பொருட்களை தரையிறக்கக் கலத்திற்கு மாற்றிவிட்டு -

காரைநகரை நோக்கி நகரத் தொடங்கியது.

2 'டோறா' படகுகள் 'லங்கா முடித'வுக்குப் பாதுகாப்பாகச் செல்ல -

3 'டோறா' படகுகளும், பீரங்கிக் கப்பலும் தரையிறக்கக் கலத்தோடு துறைமுகப் பகுதிக்குள் நுழைய -

'சாள்ஸ் சிறப்புப் படையணி'யையும், 'நளாயினி சிறப்புப் படையணி'யையும் சேர்ந்த 3 தாக்குதற் பிரிவுகள் -

இரண்டு முனைகளிலும் சமநேரத்தில் சண்டைஅரங்கைத் திறந்தன.

இரு முனைகளினதும் நாயகர்களாக, கடற்கரும்புலிகள் களத்தில் இறங்கினர்.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகளினது துணைத் தளபதி பிருந்தனின் கட்டளையிலின் கீழ் -

கடற்புலிகளின் தாக்குதற் தளபதிகளான டேவிட், குபேரன் முதல்வன் ஆகியோர் மூன்று தாக்குதற் பிரிவுகளையும் - 'நளாயினி படையணி'யின் சண்டைப் படகு ஒன்றை லெப். கேணல் இளநிலாவும் வழிநடாத்தினார்கள்.

கடும் சண்டைக்கு மத்தியில், புலிகளின் தாக்குதலணிகளுக்குப் பின்னாலிருந்து திடீரென அவர்களை ஊடறுத்துப் பாய்ந்த கீர்த்தியும், சிவாவும் -

சண்டையிட்டுக்கொண்டிருந்த 'டோறா' ஒன்றை நேரெதிராக மோதினர். பற்றிப் பிடித்த பெருநெருப்போடு இரண்டு மணி நேரமாக கடலில் எரிந்த அந்தப் படகு, பின்னர் மூழ்கிப் போனது.

மாதகல் கடலில் -

பாதுகாப்புக்காகச் சென்றுகொண்டிருந்த இரண்டு 'டோறா'க்களும் விரட்டியடிக்கப்பட -

'லங்கா முடித'விலிருந்து கரைகத் துப்பாக்கிகள் பொழிந்த ரவை மழையை ஊடறுத்து விரைந்த அன்புவும், செவ்வானமும் அதன் நாரியில் மோதினார்கள்.

மிகப் பலத்த சேதத்திற்கு உள்ளான அந்த கடற்படை விநியோகக் கப்பல், இழுத்து இழுத்துப் போய் இப்போது காரைநகரில் ஓய்ந்து நிற்கின்றது.

• • •

எதிர்ப்பாய்ச்சலாக நெற்றியிலடித்த புலிப்பாய்ச்சலோடு' விரட்டியடிக்கப்பட்ட போதும் - பகைவன் சுருண்டு போய்ப் படுத்துவிட்டதாகச் செய்தியில்லை. மாறாக -வரிந்து கட்டிக்கொண்டு அவன் தயாராகி வருவதாகத்தான் காற்றோடு வருகின்ற தகவல்கள் காதில் உரைக்கின்றன.

படை நகர்த்தல்கள், போர்க்கல விநியோகங்கள், யுத்தப் பயிற்சிகள், பரீட்சார்த்த ஒத்திகைகள், தாக்குதலணி சீராக்கல்கள் என -

முன்னேறுவதற்கான முன்னேற்பாடுகளும்-முறியடிப்பதற்கான தயார்ப்படுத்தல்களுமாக , வடபுலப் போர் அரங்கு, ஓய்வற்ற சுறுசுறுப்போடு இயங்கிக்கொண்டிருக்கின்றது.

போனால் போகட்டுமென்று கிழக்கை விட்டுவிட்டு, பிடிக்கிறேன் பாரென்று வடக்கிலே குவிந்து வந்து -

''யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி. மீள எழும்ப முடியாத உச்சந்தலை அடிபோட்டுப் புலியைப் படுக்கையில் விழுத்த'' என, அராலிக் கண்ணிவெடியின் கிடங்கிலிருந்து தோண்டி எடுத்த 'கொப்பேகடுவ போர்த்திட்ட'த்தோடு ஆயத்தமாகிறான் பகைவன்.

மாரி மழைக்கு முன்னர் பொழியுமென்று சொல்லப்படும் குண்டு மழைக்குள் குடிமுழுகிப் போகாமல், நின்று பிடித்துத் தங்கள் உயிர் காத்துக் கொள்ளவென, நிலம் வெட்டி அரணாக்கும் தற்காப்பு ஏற்பாடுகளில் மும்முரமாய் ஈடுபடுகின்றார்கள் மக்கள்.

ஆளணி என்ன, அம்பு வில்லென்ன, எப்பேர்ப்பட்ட படையணி கொண்டும் வருபவன் வரட்டுமென்று, தங்கள் போரணி நிமிர்த்தி முன்னணி நிறுத்தி, ''வா இனி!'' என்று வாசலில் காத்திருக்கின்றார்கள் புலிகள்.

இத்தகைய களநிலையில்தான் -

தலைவர் பிரபாகரன் அவர்கள் -

யாழ்ப்பாணச் சமரை இருவேறு வழிமுறைகளினூடு கையாளும் - போர்நுட்பம் மிக்க - தந்திரோபாயம் ஒன்றை அரங்கேற்றினார்.

சமரில் வெல்வது ஒரு யுக்தி; சமரையே வெல்வது இன்னொரு யுக்தி. அதாவது -

எதிரி முன்னேறும்போது தடுத்து நிறுத்தத் தாக்குவது ஒரு யுக்தி; முன்னேறும் முன்பே தாக்கித் தடுத்து நிறுத்துவது அடுத்த யுக்தி.

முதலாவதற்கான முன்னேற்பாடுகளை ஒழுங்கமைவு செய்துகொண்டிருந்த அதே சமநேரத்திலேயே, தலைவர் அவர்கள் இரண்டாவதையும் நடைமுறைப்படுத்தினார்.


வான் பிராந்தியப் போக்குவரத்து முற்றாகவே சீர்கெட்டுப் போய்விட்ட இன்றைய களநிலைவரத்தில் -

யாழ். குடாநாட்டில் நிறுத்தப்பட்டிருக்கும் நாற்பதாயிரத்திற்கும் குறையாத துருப்புக்களுக்குமான விநியோகத்தை மேற்கொள்ள, சிங்களப் படையிடம் கைவசமிருப்பது -


கடற் பிராந்தியத்தினூடான தனியொரு வழங்கற் பாதை மட்டும்தான்.

இதோ சமருக்கு முன்னரே சமரை வெல்லும் யுக்தி !

தலைமகன் விழியசைத்தான்! அலைமகள் வழிசமைத்தாள்! வானம் வாழ்த்தியது! நிலம் நெட்டி முறித்தது! நீரைக் கிழித்துச் சீறிப் பறந்தன நீலப் புலிகளின் வேகப் படகுகள்! .. முல்லைத்தீவு... புல்மோட்டை... காங்கேசன்துறை மாதகல்... 'முன்னேறும் பாய்ச்ச'வின் முன்னேற்பாடுகளை முறியடித்து, சிங்களப் படையின் ''தலை விதி''யைத் தீர்மானித்தபடி .. கடலெங்கும் விரிகிறது களம்! ○



மேஜர் மோகன்
(தளையசிங்கம் சுதாமோகன்)
தாளையடி.



கப்டன் ராம்குமார்
(தங்கராசா தங்கேஸ்வான்)
அம்பன், குடத்தனை.

www.eelamview.com




# வட புலப் போர் அரங்கின் கள நிலைமை என்ன?

*இன்றைய களநிலைமையை இந்த விளக்கக் குறிப்பு தெளிவுபடுத்துகின்றது. குடாநாட்டில் நடைபெறும் சிங்கள அரசின் படைக்குவிப்பு சந்திரிகா அரசு நினைப்பதைப்போல எந்த இராணுவ வெற்றியையும் சாதிக்கப்போவதில்லை அதேசமயம் எமது மக்கள் மனதுவைத்தால் ஒரு வரலாற்று வெற்றியை பெறலாம் என்பதை, இந்த விளக்கக்குறிப்பு சுட்டிக்காட்டுகின்றது.*

வடபுலத்திலுள்ள சிங்களப் படைக்கான விநியோகங்களைச் சீர்குலைத்துவிடல் என்பது தான், புலிகள் இயக்கத்தின் தற்போதைய போர் உபாயம் ஆகும்.

குடாநாடு மீதான படையெடுப்பை முறியடிக்க, தலைவர் பிரபாகரன் வகுத்த இந்தப் போர்த்தந்திரத்தை - கடற்புலிகளும், விமான எதிர்ப்புப் பிரிவினரும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இதுகாரணமாக வடபுலப் படையினருக்கான கடல் - வான் வழி விநியோகங்கள் பெரிதும் சீர்குலைந்துள்ளன என, இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி, கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

''குடாநாட்டைக் கைப்பற்றிவிடுதல்'' என்ற பேராசையுடன் வடபுலம் நோக்கிப் பெருமளவு படையினர் நகர்த்தப்பட்டதால், சிங்கள அரசு, கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதியை இழந்து நிற்கின்றது. அதுகாரணமாக அங்கே அமைக்கப்பட்டிருந்த அத்துமீறிய குடியேற்றத் திட்டங்களில் இருந்து சிங்களவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, கிழக்கு மாகாணத்தின் அரசுப்பொருளாதாரத்தையும் இப்போது, புலிவீரர்கள் சிதைத்துவருகின்றனர். வடக்கிற்கு அனுப்பப்பட்ட படையினரை மீண்டும் திருப்பி அழைத்தாலும்கூட, முன்பிருந்தது போல சிறுசிறு முகாம்களை அமைத்து கிழக்கை, ஆக்கிரமித்து வைத்திருக்கலாம் என்ற கனவை, சிங்களப் படைத்தலைமை இனிமேல் காணமுடியாது. அந்தளவுக்கு, நிலைமையைப் புலிகள் இயக்கம் பயன்படுத்திவருகின்றது.

இந்தக் களநிலைமை புலிகளுக்குச் சாதகமாக மாறிவருவதுடன், போராட்டத்திற்கு ஒரு வளர்ச்சியையும் கொடுத்துள்ளது எனலாம்.

சந்திரிகா அரசுடனான பேச்சுக்கள் முறிவடைந்ததற்கான பிரதான காரணிகளில் ஒன்று கிழக்கு மாகாணத்தில், போராளிகள் ஆயுதங்களுடன் நடமாட அரசு அனுமதிக்க வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கையை அரசு ஏற்காது விட்டமை ஆகும். ஆனால், இன்று கிழக்கின் களநிலைமை எப்படி இருக்கின்றது? பெரும் பகுதி நிலம் புலிவீரர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டது! அங்கே போராளிகள் சுதந்திரமான முறையில் ஆயுதங்களுடன் நடமாடிவருகின்றனர். எனவே, புலிகளின் சாதாரண ஒரு கோரிக்கையை ஏற்க மறுத்த சந்திரிகா அரசு, போர் தொடங்கக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்கிவிட்டு, இப்போது கிழக்கின் பெரும் பகுதியில் இருந்து தனது படைமுகாம்களையே அகற்றிவிட்டது. அப்படியாயின் இதை முன்னரே செய்து சமாதானப் பேச்சிற்கு வலுவூட்டியிருக்கலாமே!

யாழ். குடாநாட்டில் இப்போது, நாற்பதாயிரத்திலிருந்து ஐம்பதாயிரம் துருப்புக்கள்வரை குவிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தப் படைக்குவிப்பு காரணமாக, வடபுல முகாங்களின் எல்லைகளை மேலும் விரிவுபடுத்த அரசுப்படைகளுக்குச் சுலபமாக இருக்கின்றது. ஆனாலும், யாழ்ப்பாணம் மீதான பெரும் படையெடுப்பு என்று வரும்போது, அரச படைகள் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி வரும் என்பது திண்ணம்.

ஒரு போரின் வெற்றி என்பது, அதன் வெற்றிகரமான விநியோகத்தில் தங்கியிருக்கின்றது. வடபுலத்தில் குவிக்கப்பட்டுள்ள படையினரைப் பொறுத்தளவில், அதன் விநியோக வழிகள் கடலும், வானும்தான். போர் நடைபெறும்போது அதன் விநியோகம் சிதைவடையுமாயின் அது. ஒட்சிசன் முடிந்த சிலிண்டருடன் நீருக்கு அடியில் இருப்பதற்கு ஒப்பானதாகிவிடும். இந்த நிலையில், உயிரைப் பாதுகாக்க வேண்டுமாயின், நீரின் மேற்பகுதிக்கு கட்டாயம் வந்தே தீரவேண்டும். அதுபோல ஒரு மரபுவழிப் படைக்கான விநியோகங்கள் பெரிதும் பாதிக்கப் பட்டால், அது போரைக்கைவிட்டு சரணடைய வேண்டிய கட்டாய நிலைக்குள் தள்ளப்படலாம்.

விநியோக வழிகள் அடைக்கப்பட்ட நிலையில் தனித்துவிடப்பட்ட பல பத்தாயிரம் பேர் கொண்ட பெரிய படையணிகள்கூட, ஒரு சில ஆயிரம் பேர்கொண்ட எதிர்த்தரப்புப் படையிடம் சரணடைந்துவிடும் அதிசயங்கள், உலகத்தில் நடந்தேறியிருக்கின்றன.

வியட்னாம் மீதான பிரான்சிய ஆக்கிரமிப்பிற்கு முடிபுகட்டிய 'தீன் - பீன் - பூ' சமரில் பிரான்சியப் படைகளின் தோல்விக்குப் பிரதான காரணம், அதன் விநியோக வழிகளை வியட்னாம் போராளிகள் அடைத்ததுதான். இதன் விளைவாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பிரான்சியத் துருப்புக்கள், வியட்னாம் போராளிகளிடம் சரணடைந்தன. இதேபோல, பங்களாதேஷ் தனிநாடாக உருவாக்கப்பட்டபோதும் இலட்சக் கணக்கான பாகிஸ்தானியத் துருப்புக்கள் இந்தியப் படைகளிடம் சரணடைந்தன. இதற்கும் பிரதான காரணம், பங்களாதேஷில் நிலைகொண்டிருந்த பாகிஸ்தானியப் படையினர் தமது தாய்நாட்டுடனான விநியோகத் தொடர்புகளை முற்றாக இழந்துபோனமைதான். அத்துடன், மிக அண்மையில் சுதந்திரம் பெற்ற தேசமான எரித்தியாவிலும் இந்த அதிசயம் நடந்திருக்கிறது. எரித்திய தேசத்தின் எதிரிகளான எத்தியோப்பிய அரசுப் படைகளில் பல்லாயிரக் கணக்கானோர், தமது நாட்டுடனான 'தொப்புள் கொடி' அறுந்ததினால் - டாங்கிகள் மற்றும் கனரக ஆயுதங்களுடன் - எரித்தியப் போராளிகளிடம் சரணடைந்ததையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

> *ஒரு போரின் வெற்றி என்பது, அதன் வெற்றிகரமான விநியோகத்தில் தங்கியிருக்கின்றது. விநியோக வழிகள் அடைக்கப்பட்ட நிலையில் தனித்துவிடப்பட்ட பல பத்தாயிரம் பேர்கொண்ட பெரிய படையணிகள்கூட, ஒரு சில ஆயிரம் பேர் கொண்ட எதிர்த்தரப்புப் படையிடம் சரணடைந்துவிடும் அதிசயங்கள், உலகத்தில் நடந்தேறியிருக்கின்றன.*

தற்போதைய நிலையில் - தமிழீழக் கடலிலும் வானிலும் - புலிகளின் கைகளே படிப்படியாகப் பலமடைந்துவருகின்றன. இதைச் சிங்கள இராணுவ ஆய்வாளர்களே வெறுப்புடன் ஒப்புக்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கின்றனர். இந்த நிலையில், வடபுலத்தில் குவிக்கப்பட்டுள்ள ஐம்பதினாயிரம் சிங்களப்படைகளை எண்ணிப் பீதியடையவேண்டியது தமிழ்மக்கள் அல்ல; அது, சிங்கள தேசத்திற்குரிய கவலையாகும்!

ஆனாலும், நாம் சும்மா இருக்க எமது மண்ணில் அதிசயங்கள் சில நிகழவேண்டும் என்று எதிர்பார்ப்பதும் முறையல்ல! விநியோக வழிகள் சிதைந்துள்ளதால், தொடர்ச்சியாகப் போரிடும் ஆற்றலைக் குடாநாட்டிலுள்ள சிங்களப் படைகள் இழக்கப்போகின்றன என்பது, உண்மையே ஆகும். இருந்தபொழுதிலும், படையெடுப்பைக் கைவிட்டுவிட்டு, படையினர் பலாலிக்குள் பதுங்கி இருக்கப்போகின்றனர் என்று நாம் கற்பனை பண்ணவும் கூடாது. குடாநாட்டின் பெரும்பகுதி நிலத்தைக் கைப்பற்றுவதன்மூலம், இழந்துபோயுள்ள விநியோக வழிகளை ஏதோ ஒரு வகையில் திறப்பதற்கு, அரசுப்படைகள் முயலக்கூடும். அத்தகையதொரு முயற்சியை எதிர்பார்த்து. புலிகள் இயக்கம் காத்துக்கிடக்கின்றது. அந்த முயற்சியை நாம் முறியடிப்போமானால், அதன்பின்னர், குடாநாட்டிலுள்ள சிங்களப் படைகளுக்கு, புலிகளிடம் சரணடைவதைத் தவிர வேறுவழிகள் இருக்க மாட்டாது. இந்த வரலாற்று நிகழ்ச்சி நிச்சயம் நடந்தே தீரும் என்பதில், புலிகள் இயக்கத்திற்கு முழு நம்பிக்கை உண்டு.

சந்திரிகா அரசின் புதிய போர்முறைத் திட்டத்தில், சிங்கள இராணுவ இயந்திரத்தின் புதைகுழியும் உள்ளது என்பதை வரலாறு காட்டும். ஆயினும், இந்த வரலாற்றுச் சாதனையை நிறைவேற்றுவதற்கு தமிழர் படைக்கு கூடுதல் ஆட்பலம் தேவை என்பதை, எமது மக்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். இந்த மாரிகாலம் முடிய முன்னர் புலிகள் இயக்கத்தின் ஆட்பலம் பல ஆயிரங்களால் அதிகரிக்குமானால், அடுத்த வருடத்தில், பல அதிசயங்கள் குடாநாட்டிற்குள் நிகழும்! ○

## திருப்தி

*என்*
*துப்பாக்கிக்கு எண்ணெய் தடவும்போது*
*குட்டித் தங்கைக்கு - அம்மா*
*எண்ணெய் தடவி - நோகாமல்*
*தடுக்குப் பாயில்*
*கிடத்தும் நினைவே நெஞ்சில் எழும்...*

*என்*
*துப்பாக்கிக்குழலை*
*இழுகயிற்றால் இழுக்கும்போது*
*சுவாசம் தடைப்பட்டவருக்கு*
*செயற்கைச் சுவாசம் கொடுக்கும்*
*நிகழ்வே நினைவில் வரும்;*

*என்*
*துப்பாக்கி 'பட்' மடித்திருக்கும்போது*
*என்னை யாரோ*
*கட்டிப்போட்டது போன்றதான*
*அந்தரமாய் இருக்கும்.*

*என்*
*துப்பாக்கி ரவைக்கூட்டில்*
*ரவை நிரம்ப இருந்தால்*
*வயிறு நிரம்பிய திருப்தி எனக்கு*
*என்றாலும் என்*
*துப்பாக்கி ரவை ஒவ்வொன்றுக்கும்*
*ஒவ்வொரு எதிரி விழுகின்றான் என்றால்*
*துள்ளிக்குதிக்க வேண்டும் போலிருக்கும்*

**- கு. அறிவுக்குமரன் (போராளி)**

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com